உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உக.] ருதிரோற்காரி- ஹு ஆனி-மீ [பகுதி அ.

Vol. XXI. June-July-1923. No. 8.

மலைகடலுற்பத்தி.

(உருக-ம் பக்கத்தொடர்ச்சி).

15. பொன்னின் றுகளையும் கருமணலையுங் கலந்து கொல்லுலையி விட்டு நன்றாகக் காய்ச்சினாற் பொன் உருகிக் கீழேசெல்லும்; மணல் மேல் நிற்கும், மணலினும்பார்க்கப் பொன் கனமுடையதாதலின், நீரின்மீது கிடைச்சுமிதப்பதுபோல, உருக்கப்பட்ட பொன்னின்மீது மணலானது மிதக்குந்தகையதாயிற்று. கொல்லுலைவெப்பத்தினும் பார்க்கப் பன்மடங் கதிகமான வெப்பத்தைத் தரவல்ல மின்சாரஉலையின் மீது பொன்றுகளையும் கருமணலையுங் கலந்து இட்டு உருக்கினால் ...லும் உருகி நீர்த்தன்மையையடையும். உருகிய பொன்னின்மீது ...ருகிய மணல் நீரின்மீது நெய்மிதப்பதுபோல மிதக்கும். படிகக்கண் ...டிசெய்வோர் மணலை உருக்கி நீர்த்தன்மையதாக்கி வேறுசிலபொருட் ...யுஞ்சேர்த்துக் கண்ணாடியாக்குவர். கொல்லுலைவெப்பத்தில் மண ...தலைக் கண்டிலமாதலின் மணல் உருகாப்பொருள் எனக்கொள் ...என்றல் பொருந்தாது. ஜகத்திலுள்ள பொருட்களனைத்தும் ...ன்மையவே. சிலவற்றையுருக்குவதற்குச் சிற்றளவாகிய ...ாதியதாகும்; வேறுசிலவற்றுக்குப் பேரளவாகியவெப்பம் ...ம்; இதுவே வேறுபாடு. சூரியகோளத்தின் வெப்பநிலை ...பொருட்களனைத்தும் பிருதிவி(கட்டித்தன்மை), அப்பு ...லையை விடுத்துத் தேயு, வாயு, ஆகாயம் ஆகிய நிலைகளை ...துறை இருநூற்றெழுபத்துமூன்று(—273)பாகை

என்னும் தட்பநிலையில், பிருதிவிநிலையும் (solid) ஆகாயநிலையும் (ether) எஞ்சியிருக்க இடைநின்ற அப்பு (liquid), தேயு (vapour), வாயு (Gaseous) நிலைகள் ஒழிந்துபோவன.

16. அக்கினிப்பிழம்பாக உலகு இருந்தகாலத்தில் அதனைச் சூழ வாயுமண்டலமும் ஆகாயமண்டலமும் இருந்தன. மண்ணும் நீரும் இருந்ததில்லை. சுருங்கச்சொல்லின் இந்நாளில், சூரியகோளம் இருக்கும்நிலையில் உலகு இருந்தது. பழுக்கக்காய்ச்சிய இரும்பை இருட்டறையில்வைப்பின் ஒளியுள்ளதாகத்தோற்றுவதுபோல உலகு சுயமாகிய ஒளியோடுவிளங்கிற்று. அவ்விரும்புத்துண்டம் வெப்பங்குறைந்து சிறிதுசிறிதாகத் தட்பமுற்றுச் செக்கர்வானிறம்போலச் சிவந்து ஈற்றில் ஒளியிழந்துவிடுவதுபோல உலகுங் குளிர்ந்து தன்னொளியிழந்து நின்றது. இங்ஙனம் குளிர்ந்துவரும்போது, அக்கினிக்கோளத்தைச் சூழவிருந்த வாயுகோளத்திற் றங்கிநின்றநீராவி குளிர்ந்து நீராகி உருக்குண்டபொன்போன்றிருந்த உலகின்மேல்விழுதலினாற் பழுக்கக்காய்ச்சிய இரும்பின்மேற்பட்ட நீர்த்துளிபோல நீர் மீட்டும் ஆவியாதலும் உலகு இருந்தநிலையினின்று சற்றுக் குளிர்தலும் இயல்பேயாம். இவ்வாறு பல ஊழிகள் கழிந்தன (பரிபாடல் 2-ம் செய்யுளை நோக்குக). பொன் வெள்ளி, இரும்பு, செம்புமுதலிய லோகப்பொருட்களும், மணல் கல் முதலிய பிறபொருட்களும் ஒருங்கு உருக்கப்பட்ட நிலையில் மணல் கல் முதலியவை மேல்மிதக்கப் பொன் முதலிய உலோகவகைகள் ஆழ்ந்து சென்றன. பொன்றுகளையும் கருமணலையும் உருக்கியவிடத்து ஒரு... துகள்கள் மண்ணின் இடைவெளியிற்றங்கிநிற்பதுபோலச் சிற்ற... பொன் கற்பாறைகளினுள்ளே தங்கிநின்றது. பலவூழிக்காலங்கள... குளிர்வெய்தியவுலகம் பறவையண்டத்தின் மேலோட்டைப்போன்ற... லோடும் உள்ளிருக்குந் திரவப்பொருளைப்போன்ற உருக்குண்ட ... பொருளும் பொருந்திப் பூ (பிருதிவி) கோளம் என்னும் ... உரிமைபூண்டுநின்றது. இந்நிலையில வாயுமண்டலத்திலு... குளிர்ந்து மழையாகப்பொழிந்து நிலப்பரப்பின்மீது மலை, கட... பேத மேற்பட்டிராமையினால் யாண்டும் பரந்து பூகோளத்... நீர்க்கோளமாகநின்றது.

"செந்தீச்சுடரியவூழியும்பனியொடு
தண்பெயறலைஇயவூழியுமவையிற்

முண் முறைவெள்ளமூழ்கியார் தருபு
மீண்டுமபீடுயர்பிண்டியவற்றிற்கும்
உள்ளீடாகியஇருநிலத்தூழியும்"

என்பது இங்ஙனம் உணரற்பாலது. இவ்வாறு பலவூழிக்காலங்கள் கழிந்தன. உள்ளிருந்த உருக்குண்டபொருள் இறுகிக் கட்டியாதலும் மேனின்றஓடு வெடிப்புண்டு பள்ளமுந் திடருமாவதும் இயல்பேயாம். அஃதெதுபோலவோவெனின், கிச்சிலிப்பழத்தை வெயிலிற்போட்டால் உள்ளேயிருக்கும் ரசம் சிறிது வற்றி அளவிற் குறைய மேற்றோல் சுருக்கமடைவதுபோல வென்க. இங்ஙனம் பள்ளமுந் திடருமாகுமிடத்து மேனின்றவெள்ளமானது பள்ளத்தைநோக்கியோடுதலும் திடர்நிலம் நீரினைமேற்றோற்றுவதும் இயல்பேயாம். பூகோளத்தின்மேற்பரப்பிற் காற்பங்கு நிலனாக முக்காற்பங்கு நீராகவே நின்றது. நிலத்தில் நனியுயர்ந்தபாகங்கள் மலையெனப்பட்டன. பின்னர்ச்சூரியனுடையஒளியினாற் கடனீரானது நீராவியாய்மாறுதலும் அந்நீராவியானமைந்த மேகம் மலைகள்மீது தங்கி மழையாகப்பொழிதலும் நடந்துவருதல் இயல்பாயிற்று. இச்செயல் இன்றும் மாறுவியல்பினதாய் நடந்துவருகிறது. இன்னணம் மலைகளிலிருந்திழிந்த நீருவி பல ஒருங்குதிரண்டு கடலினுட்பாயுந்நதிகளாயின. இவ்வூழியில் உலகின் மேற்பரப்பிருந்ததோற்றத்தை ஆராய்ந்து சிந்திப்போமாயின், கருங்கல்லும் வெண்பாறையும் பொருந் ... பெருமலைகளும் திடர்களும் மும்முரமாய் அலையெறிந்தார்க்கும் ...ம், கரைபுரண்டோடும் பெருநதிகளும் வெப்ப தட்பநிலை அடிக்கடி... றுதலால் ஏற்பட்ட பிரசண்டமாருதமும் எங்குந்தோற்ற, மரம், ...டி, கொடி, புல்வாய் என்னும் உயிர்த்தோற்றங்க ளொன்றுமின்றி ...காரவெளியாய்ப் பகற்காலத்தில் அளவுகடந்தவெப்பமும் பரிதி ...சைமன்றையக் கடும்பனியும் பெருங்குளிருமாய் அமைந்திருந்த ...னை வறிவாம்.

... உலகு இந்நிலையிலிருந்தவூழியில் இக்காலத்துள்ள சுழற்சி ...பால் இருமடங்கினதாகிய சுழற்சிவேகத்தையுடையதா... ...னாவது உதயகாலத்துக்கும் உச்சிக்காலத்துக்கும் இடையி...லை ஏழரைநாழிகை (மூன்றுமணி) மாத்திரமாய் ... இப்படிச் சிலவூழிகள் கழியப் பூமி சூரியனைச்சுற்றி

யோடும் சுற்றோட்டப்பாதையில் ஒருவகை விகற்பமேற்பட்டது. இப்பாதை இந்நாளிலுங்கூடச் சுத்தவட்டமாயில்லை. இரண்டுகேந்திரங் (Focus)களுடையநீள்வட்ட (Ellipse)மாயிருக்கிறது. இரண்டுகேந்திரங்களுள் ஒருகேந்திரம் அருக்கன்நிலையம். பலஊழிகளின்முன் இரண்டு கேந்திரங்களுக்குமிடையிலுள்ள இடைவெளி இப்பொழுதிருக்கும் இடைவெளியினும்பார்க்க மிகவும் அதிகமாயிருந்தது. ஆதலினால், மூன்றுமாதங்களுக்குச் சூரியனுக்கு அணிமையாகவும், எஞ்சிய ஒன்பது மாதங்களுக்குச் சேய்மையாகவும் பூவுலகு அசைந்துசெல்வதாயிற்று. இந்நிலையில் ஆண்டின்பெரும்பாகத்துக்குப் பூகோளமேற்பரப்பு உறை நீரினால் மூடுண்டுகிடந்தது.

19. அக்கினிக்கோளமாயிருந்தஉலகு குளிர்ந்து பிருதிவிகோளமாயிற்று எனக் காட்டினும். மேலும் கல், மண்முதலியவற்றாலமைந்த மேலோட்டினுள்ளே பறவையினண்டத்துள் திரவப்பொருள் இருப்பது போல உருகிய லோசப்பொருள் இருக்கிறதென்பது பலவிஞ்ஞானசாஸ்திரிகளுடைய முடிபு. அற்றன்று; உள்ளிருக்கும்பொருளும் இறுகிக் கட்டியாயிற்றெனபது மற்றொருசாரார்து கொள்கை. அஃதெங்ஙனமாயினும், சுரங்கமறுத்துக் கீழேசெல்லச்செல்ல வெப்பநிலை மிகுந்து கொண்டுபோகிறதெனபது அநுபவத்திற்கண்டமுடிபு. இனி, பூகோளத்தினது நிறை இவ்வளவெனபதாகக் கணிதசாஸ்திரிகள் கண்டறிந்திருக்கிறார்கள். எங்ஙனம் கண்டறிந்தார்களெனின், பூமி பொருட்களைத் தனனிடத்திற் கவர்ந்துகொள்ளுகிற கவர்ச்சிவேகத்தை (accelera[illegible] due to gravitation) அளந்தறிந்து இவ்வளவு கவர்ச்சிவேகத்[illegible] தருதற்குவேண்டியநிறை இவ்வளவாகவிருத்தல்வேண்டும் எனக் கண[illegible] கிட்டறிந்தார்கள். பொன்னினாலாகிய ஒருகோளத்தையும், அதே அ[illegible] வினதாகக் கருங்கல்லினாலாகிய மற்றொருகோளத்தையும் நிறுத்[illegible] பார்ப்போமாயின் இருகோளங்களும் ஒரே அளவினவாகவிருப்[illegible] பொற்கோளம் கருங்கற்கோளத்தைப்போல ஏறக்குறைய ஐந்த[illegible] நிறையுடையதாயிருக்கக் காண்போம். பொன்னும் கல்லு[illegible] ஆகியகோளம் இடைநிகர்த்த நிறையினதாய் இருக்கும் என்[illegible] லாமலே முடியும். பூகோளத்தினுடைய நிறையானது பூகே[illegible] தாகக் கல்லினாலமைந்தகோளத்தின்நிறையினும்பார்க்க[illegible] லால், கல் மண்ணாலமைந்த மேலோட்டினுள்ளே கனத்த[illegible]

பொன்முதலியலோகங்கள் நிறைந்திருக்கவேண்டுமென்பது முடிபாகின்றது. பூகோளமத்தியிற் பெரியதோர் பொற்கோளமிருப்பதாகவும், பொன்னினுங் கனத்தபொருளாகிய பிளாற்றினம் (Platinum) அதனுள்ளிருக்கப் பொற்கோளத்தைச் சூழ வெள்ளி, செம்பு, இரும்புமுதலிய லோகங்களாலமைந்த கோளங்களிருப்பதாகவும், கல், மணல், கரி, மின்னரம் இவற்றாலமைந்த மேலோடு மேற்குறித்த கோளங்களனைத்தினையும் மூடிப் பறவையண்டத்தின்மேலோட்டைப்போன்றிருப்பதெனவும் நிலநூல் ஆராய்ச்சியோர் (Geologists) முடிபுசெய்திருக்கிறார்கள். மணலினுள்ளே பொன்னின்றுகள் மீந்துநிற்பதுபோலச் சிற்றளவாகியபொன் மேலோட்டினுள் எஞ்சியிருக்கும் என்பதை மேலே 16ம் பிரிவினுட் காட்டினும். மன்னர் மண்டலீகரும், வணிகமாக்களும் பிரபுக்களுஞ் சண்டையிட்டுக்கொள்வது பூகோள மேலோட்டினுள்ளே அமைந்திருக்குஞ் சிற்றளவாகிய பொன்னுக்குத்தான். பூமத்தியத்திலமைந்திருக்கும் பொற்கோளம் இரண்டாயிரமைல் உயரமுடையதாய் மாற்றுயர்ந்த பசும்பொன்னால் ஆகியது. இதனை யெடுப்பதற்கு வழியறியாமையினாற் பொன்விழைமாக்கள் அவாவடங்காதலைகின்றனரென்பதொருதலை.

20. பூகோளமேற்பரப்பிலேற்பட்ட மாறுதல்களைப் பின்னும் ஆராய்வாம். (i) "மெல்லெனப்பாயும்தண்ணீர் கல்லையுங் கரைத்துப் பாயும்" என்னும் முதுமொழிக்கிணங்க ஓடுகின்றநதிகள் தாஞ் செல் [illegible] கால்வாயினுட் டலைப்படுகிற கற்களையுருட்டி ஒன்றினோடொன் [illegible]ரயப்பண்ணிக் கற்றுகளாகியமணலை யீர்த்துச்சென்று சங்கமுகங் [illegible]ற் படியப்பண்ணுவன. (ii) கற்குகைகளில் நிறைந்துநின்றநீர் குளிரினால் இறுகிக் கட்டியாதமிடத்துக் கற்பாறைகள்பிளப்புண்ணுவன. (iii) கடும்வெயிலினால் வெப்பமடைந்திருக்கும் கற்பாறைகளின்மீது [illegible]டென்று பனிக்குளிர்வீசுவதனால் அக்கற்பாறைகள் சிறுசுக்கல்களாக [illegible]ப்புண்டுபோவன. மேலேகாட்டிய மூவகையேதுக்களினாலும் கற் [illegible]ாயிருந்த பூகோளமேற்பரப்பு வெண்மணலுங் கருமணலுமாக [illegible]து. இனி, வெப்பமிக்கிருக்கும் பூகோளமேலோட்டினுள்ளே [illegible]லும் அந்நீர் ஆவியாகி யுதைக்க, அவ்வுதைப்பினால் மேலோடு [illegible] அவ்வெடிப்பின்வழியாக உருக்குண்டகற்பாறையும் [illegible]ாகப்பொருட்களும் புறந்தோற்றி வாயுமண்டலத்தின்

குளிரினால் இறுகுவன. இவ்வாறு ஏற்பட்ட எரிமலைகள் காலத்துக்குக் காலம் அக்கினியையும், உருக்குண்டசூரங்கப்பொருட்களையும் புகைப் படலத்தையுங் கக்குவனவாம். (சிசிலி யென்னும் இடத்திலுள்ள எட்னா —Etna—எரிமலை சிலவாரங்களின்முன் அக்கினிகான்றதனாற் பெரு நஷ்டமேற்பட்டிருப்பதாக ஆங்கிலவர்த்தமானபத்திரிகைகள் கூறு கின்றன). எரிமலையதிர்ச்சியினால் உண்டாகும் பூகம்பங்கள் ஓரோரிடத் தப் பூமியின்மேற்பரப்பில் வெடிப்புண்டாக்குவனவாம். இனி, நதி களினால் ஈர்த்துச்செல்லப்பட்டுச் சங்கமுகங்களிற்படிந்த மணலுக்கு யாதுசம்பவிக்கிறதென ஆராய்வாம். ஆற்றங்கரையில் மணல் இடிந்து விழுந்திருக்கும் இடங்களைநோக்குவோமாயின், கருமணல், வெண்மணல் களிமுதலியன படலம்படலமாக அமைந்திருக்கக் காண்போம். சிறிது காலத்துக்கு வெண்மணல் படிந்தமைந்திருக்க அதன்பின் நதியின் போக்குவேறுபாட்டாலோ, காலவேறுபாட்டாலோ கருமணல் படிதல் கூடும். ஆதலின் இவை இருவேறுபடலமாக இயைந்திருப்பது இயல்பே யாம். இங்ஙனம் படிந்தமணல் காலாந்தரத்தில் இறுகுண்டு மணற்பாறை யாகும். இங்ஙனம் ஏற்பட்ட பாறையைப் பூழிக்கற்பாறை (Sedimentary rocks) என்பாம். கலங்கல்நீர் தெளியும்போது அடியில் உறை கின்ற பொருளைப் பூழியென்போமாதலின், இப்பெயர் ஏற்புடையதேயாம். மேல்வரும்தாவரசங்கமோற்பத்தியில், சிப்பி, ஊரி முதலியவற்றாற் கற் பாறைகள் ஏற்படுவன எனக் காட்டுவாம். இவற்றினை ஊரிக்கற்பாறை (Organic rocks) என்பாம். முன்புகாட்டியவாறுபோல எரிம மூலமாக எழுந்தகற்பாறைகளை அங்கிக்கற்பாறை (Igneous roc என்போம். ஆதியிலே, அக்கினிப்பிழம்பாகவிருந்துகுளிர்ந்தபூகோ தில் ஏற்பட்ட பாறைகளை மூலக்கற்பாறை (Plutonic rocks) என் போம். படலம்படலமாக இயைந்திருக்கும் கற்பாறையைப் படலக் கற்பாறை (stratified rocks) எனலும், பூகம்பத்தினாலேற்பட்ட பாறைகளைப் பூகம்பக்கற்பாறை (Eruptive rocks) என பொருத்தமேயாம்.

21. இவ்வாராய்ச்சியில் வரப்போகுஞ் சிலசொற்களின் வரையறுத்துக்கொண்டு அப்பாற் செல்வாம். நிலத்தின் லுள்ளஉயிரில்பொருட்களின் அமைப்பைப் பொதுவாக

புடவியல், பிருதிவிசாஸ்திரம் (Geology) என்பாம். கற்பாறைகளைச் சிறப்பாகஆராயும்நூலைச் சிலைநூல், பருப்பதசாஸ்திரம் (Petrology) என்பாம். சுரங்கத்துள்ளபொருட்களைச் சிறப்பாக ஆராயும்நூலினைப் பிலப்பொருள்நூல், சுரங்கவஸ்துசாஸ்திரம் (Mineralogy) என்பாம். இதன் ஒருபகுதியதாய் நவமணிகளை யாராயும்நூலினை மணிநூல் அரதனசாஸ்திரம் (Study of gems) என்பாம். பூகம்பஅசைவை யாராயும்நூலினைப் பூகம்பநூல் (seismology) என்பாம். பூமியின் மேற்பரப்பைத் தலம் (crust) என்பாம். தலத்தின் கீழுள்ளது அதலம் (subterranean). ஓங்கல் (elevation), ஞெள்ளல் (depression), பிளப்பு (clea, age), சுருக்கம் (shrinkage), அமுக்கம் (pressure), அதோமுகம் (delta), கழிமுகம் (mouth), பூழி (sediment), அறல் (fine sand), முருகைக்கல் (coral), சுண்ணக்கல் (limestone), பருக்கைக்கல் (sandstone), ஒருநீர்மை (homogeneous), பலநீர்மை (heterogeneous), கலந்தொன்றுதல் (aggregation), கட்டியாதல் (solidification), நீராதல் (Liquefaction), ஆவியாதல் (vaporization), அரித்துச்செல்லல் (denudation), படலமாக்கல் (stratification), படிகநிலை (crystalline), துகள்நிலை (amorphons), என்னும் சொற்கள் ஆட்சியினுல் அறியற்பாலன.

22. பூவுலகின்மேற்பரப்புநாடோறும்வேறுபாடடைந்துகொண்டு போகிறது. மலை கடலாகவும், கடல் மலையாகவும், மருதம், பாலையாகவும் பாலை மருதமாகவும் காலாந்தரத்தில் மாறுதலடைவது மியல்பே. பல்லாயிரவருடங்களுக்குமுன்பு இமயமலை கடல்மட்டத்தின்கீழிருந்த தென்பர். அந்நாளில் விந்தமுதற் குமரிவரையும் உள்ளநாடு ஒரு அகன்ற தீவாகஇருந்ததெனவும், இலங்கை மிகவும் அகன்று பரந்திருந்ததென வும், ஆஸ்திரேலியா, இலங்கை, மடகாஸ்கர் என மிகவும் சேய்மைக்கண் இருக்குந்தீவுகள் ஒன்றாய் லெமூரியா என்னும் பெயருடைய பெருங் கண்டமாயிருந்த தெனவுங் கூறுவர். "குரங்குசெய்கடற்குமரியம்பெருந் துறை" என மணிமேகலைநூலார்கூறுவதை உற்றுநோக்கும்போது "பஃறுளியாற்றுடன்பன்மலையடுக்கத்துக், குமரிக்கோடுங்கொடுங்கடல் கொண்டு" ஸ்ரீராமபிரான்சேதுபந்தனஞ்செய்தகாலத்திலென்பது புலப்படுகின்றது. அருந்தமிழ்முனியாகிய அகத்தியனுர் தமிழ்நாட்டுக்கு ...ந்தகாலமும் இதுவே. அகத்தியனுர்மாணுக்கராகிய தொல்காப்பிய

னூர் தமிழ்நாட்டுக்குக் குமரியைத் தெற்கெல்லையாகக்கூறினராகலின், குமரிக்குத்தெற்கேயிருந்து அவர்காலத்தி லழிந்துபட்டநாடுகள் தமிழ் நாடன்மை யுணர்க. இந்நாளிற் சஹாரா என்னும் பெயரோடு அகன்று பரந்துகிடக்கும் பாலைவனம் முன்னாளிற் சாகரமாயிருந்ததென்பர். இப்பொழுது அத்லாந்திக் சமுத்திரம் இருக்கும்நிலபத்தில் ஒரு பெரிய கண்டம் இருந்ததாகவும் நாகரிகம்மிகுந்த மக்கட்கூட்டத்தினர் ஆண்டு வசித்ததாகவுங் கூறுவர். ஐரோப்பாவுக்கும் ஆபிரிக்காவுக்குமிடையிற் பரந்துகிடக்கும் மத்தியதரைக்கடல் முன்னாளிற் றரையாயிருந்ததென்பர். முன்னாளில் இவ்வண்ணம் இருந்து மாறுபாடடைந்தனவென்றால், மேல் வருங்காலத்தில் வேறு பல மாறுதல்கள் உண்டாகு மென்பது திண்ணமே.

23. இவ்விகற்பங்களையெல்லாம் நிலநூல்வல்லார் எங்ஙனம் மட்டிட்டறிந்தார்களென்றால், நுண்ணுணர்வுடையோனுக்கு அவனியே பெரியதொரு புத்தகமாமென முதியோர் கூறியபடி ஆராய்ச்சிமுறையினால் நிச்சயித்தறிந்தார்களென்பது. ஆற்றங்கரையும், கழிமுகமும், கற்பாறையும், எரிமலையும், பெருநதியும், சிறுமணலும் என்றின்னோரன்னவெல்லாம் தந்தங்கதையைத் தாந்தாமே கூறுபவாம். தெருவிற் போகும்போது கருநீலநிறமான பருக்கைக்கல் ஒன்று கிடக்கக்கண்டாரிருவர்; அவருள் ஒருவன் "அதோ, ஒரு நூதனமான கல்" என்று வாளாசொல்லிவிட்டுப் போய்விட்டான். மற்றவன் அக்கல்லினை எடுத்தேகிப் பலவகைத் திராவகங்களிற் கரைத்துப் பரிசோதித்து அதன் பெரும்பகுதி பயன்படும்பொருளாகிய இரும்பு எனக் கண்டான். கண்டதும் அந்தக்கல்லகப்பட்ட இடத்தைப்போய்ப் பார்வையிட்டு ஆண்டுத் திரளான இரும்பு அகப்படும் என அறிந்து நிலத்துக்குரிமையாளனிடம் அந்நிலத்தை விலைகொடுத்துப்பெற்றுச் சுரங்கமறுத்து இரும்பை வெளிக்கொணர்ந்து பயன்படுத்திப் பெரும்பணக்காரனானான். அவனியாகிய பெரும்புத்தகத்தைப் படித்தறிந்தவன் பெரும்பயனடைவானென்பதற் கையமில்லை.

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
திருமயிலை, சென்னை.

பிரபோதசைதந்யர்.

பலகவித்திரட்டு.

(௨0௪-ம் பக்கத்தொடர்ச்சி.)

சேற்றூர் சிவகிரிச்சமீந்தார்கள் போர்செய்வது கேள்வியுற்றுச் சேற்றூரார்க் குதவியாகச் சொக்கம்பட்டித்தாளுபதி பொன்னம்பலம் பிள்ளை தண்டிகையிலேறிப் படையுடன் வந்தார். வந்தவுடன் சிவகிரியா ருடைந்து பின்னிட்டனர். இதை யொரு புலவர்கூறிய கவி:—

சேற்றூரார்நெஞ்சந்திடம்பெறவேதென்மலையான்
றோற்றோமென்றோடித்துயர்படுமே—மாற்றரசர்
தெண்டனிடுஞ்சின்னணைஞ்சான்சேனுபதிப்பொன்னன்
றண்டிகையைக்கண்டவுடன்றான்.

தென்மலை - சிவகிரியாருக்குப்பிரதானமானதோரூர்.

சொக்கம்பட்டிச் சமீந்தார் பசுத்தொழுவில்வந்த புலியைத் தடிக் கம்பாலடித்துக் கொன்றது கண்டு, அந்தச்சமஸ்தானவித்துவானாகிய கிருட்டிணபுரத்துக் கவிராயர் சொல்லிய கவி:—

செப்பும்வீரர்க்குட்புலிசெம்புலிவலங்கைப்புலியா
முப்புலிவாழுமிடந்தேடிவந்துமுரண்டுசெய்து
தப்பிலியானமடப்புலியேதடியாலடிபட்
டிப்படியேனிறந்தாய்சூரவானுக்கியல்பல்லவே.

இச்சமீந்தார் மானிபநிலங்களாற் சமஸ்தானத்துக்கு நட்டமுண் டாகிறதென்று முதலிலே இக்கவிராயருக்குதவியிருந்த மானிபநிலங்க ளைக் கைப்பற்ற முயன்றபோது இவர்கூறிய கவி:—

வட்டங்கொண்டபுவிமன்னர்கும்பிட
வாங்குங்கீர்த்திவடகரையாதிக்கங்
கிட்டங்கொண்டதுமானிபச்சேகரஞ்
செய்யிலாயிரங்கோட்டைக்குமேலுண்டு
நட்டங்கொண்டது நான்மட்டுமாவிது
ஞாயமாசெம்புலிவலங்கைப்புலிப்
பட்டங்கொண்டபெரியசுவாமிபூ
பாலராசகுபேரகெம்பீரனே.

பழனி மாம்பழக்கவிராயர் போடிநாயக்கனூர்ச் சமீந்தார்முன் பிரசங்கஞ்செய்தார். அப்பொழுது, கண்டு கேட்டிருந்த தேவாரம் சின்னச் சமீந்தார்,

"மாம்பழமேல்வாய்மையுற்றமாம்பழமேயிவ்விடத்தி
லாம்பழமைகண்டுமுடியாட்டிலனேன்"—

என்று கூற, உடனே கவிராயர்,

—நாம்பழமை

"பின்காசினிபொறுத்தாமென்னுமோவென்றிருந்தான்
மன்காமராசயபூமான்"

என்று கூறினர்.

முல்லா னென்னு மொரு மகமதியப்பிரபுவின் குணத்தை வியந்து ஒரு கவிஞர் கூறியது.

காலையிலொன்றுவர்கடும்பகலிலொன்றுவர்
மாலையிலொன்றுவர்மனிதரெலாஞ்—சாலவென்று
முல்லாளைப்போலமுகமுமகமுமலர்
நல்லானைக்கண்டிலோநாம்.

இப்பிரபுவின்மகள் ஊமை நீங்கும்படி பல்தலங்கட்குப்போய் ஊமை நீங்காமைபால், இராமநாதபுரம் ஸமஸ்தானத்தைச் சார்ந்திருக்கிற நயினர்கோயிலில்வந்து வரம்வேண்டியிருந்தபோது ஊமைநீங்கக்கண்ட புலவரொருவர் கூறிய வெண்பா;—

ஆரோகபினுரென்றம்புவியெல்லாமலைந்தோ
நீரோகயினர்நிசங்கண்டோம்—சீரேறு
முல்லாவின்பெண்வாயின்மூடந்திறந்ததனு
லல்லாவுநீராகுமால்.

சேற்றூர்ச் சமஸ்தானவித்துவான் இராமசாமிக்கவிராயர் எழுமலைச் சமீந்தார் எரசின்னுகாமயநாயுடுவைக் கண்டபோது அவர் ஏழுமலைவரும்படி ஒருகவி கூறவேண்டுமெனக் கவிராயர்கூறியது:—

ஒருமலையக்காற்குருகியுளமலையும்பொழுதினிலவ்வுவரிமீது
வருமலையுமெழுந்ததம்பாச்செம்மலையுமெடுத்தெய்யவந்தான்வந்தான்

பொருமலேயும்விரகமுநானினிச்சகியேனென்சகியேபோகியென்றுந்
தருமலேயானெழுமலேவாழரசின்னுகாமயன்பாற்சாற்றுவாயே.

செம்மல் - பழம்பூ. வந்தான் - மன்மதன்; தென்றற்காற்றை யுடையவனென்பது பொருள். வந்து - தென்றல்.

இராமநாதபுரம் ஸமஸ்தானபதி பாற்கரஸேதுபதி குமாரர் முத்துராமலிங்கஸேதுபதி விவாகநிறைவேறியபின்பு, தல்லாகுளத்தில் வந்திருந்தபோது நீங்கள் ஏன் விவாகத்துக்கு வரவில்லையென்று கேட்க, நீங்கள் சிலருக்கு மணவோலேவிடுக்கவில்லேயென்றுஞ் சிலர் வஸ்திர திரவியங்கள் வாங்கவில்லேயென்றுந் தெரிந்தேன்; அதனுல் வரவில்லே யென வியப்புறத் திருவாவடுதுறையாதீனவித்துவானும் மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகரும் ஆகிய சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர் கூறிய கவிகள்:—

பூமேவுசீர்முத்துராமலிங்கத்துரை
புரிந்தகலியாணமகிமை
போற்றுபலபுலவர்க்குமமைவுறுதொருவனுப்
புகலுதற்கெளிதாகுமோ
மீமேவுசந்திரனுமிகுகளங்கன்பகல்
விளங்குகதிரவனும்வெய்யோன்
விண்ணரசன்மிகுபோகியென்னலால்வருகிலன்
விரிஞ்சனெருதலேயிலாதான்
மாமேவுகின்றமாலவ்வேலேயிற்பள்ளி
மருவுறவிருப்பனிறையோன்
மன்னுதிருவாணியதனுலவர்க்கெழுதாது
வாழ்த்துமுன்னேனைகையா
லேமேவுகணபதியைவேண்டியேவரவழைத்
தினிதுபசரித்துமற்றே
றேவர்க்குமங்கலத்திருவோலேயெழுதியுய்த்
தெச்சிறப்புஞ்செய்தானே.

களங்கன்-குற்றமுள்ளவன், கருநிறமுள்ளவன். வெய்யோன்-கொடியவன், வெம்மையுள்ளவன். போகி-போகுகிறவன், போகத்தையநுபவித்

திருப்பவன். விரிஞ்சன்-பிரமன். ஒருதலை-துணிவு, ஒருசிரம். அவ்வேலையில்-அந்தவேளையில், அந்தப்பாற்கடலில். எனப் பொருள்கொள்க.

பார்கொண்டிலங்குமுயர்சோமனெனவருபவன்
பதினாறுகலையையுடையான்
பரிதியெழுபரிவட்டமுறவிருப்போன்றேவர்
பதியெனச்செப்புமகவா
னேர்கொண்டவாயிரமிலங்குநேத்திரமுளா
னெழிலப்புயத்துவேத
னேத்துமுன்னான்குவத்திரமுளானவனுந்தி
யினில்வாவிருந்ததிருமால்
வார்கொண்டபொன்னுடைமாறாதுபுனைதலான்
மன்னுபீதாம்பரனென
வாழ்த்துபெயர்பெற்றனனரன்புலித்தோலுடையன்
மற்றுடைகொளாததலாற்
றார்கொண்டவவர்வந்துபெற்றிலாருலகுளார்
தாம்பெறுதாருமுண்டோ
தமிழ்முத்துராமலிங்கத்துரைமணஞ்செய்து
தக்கவுடைதருபோதிலே.

பார்-உரோகிணி. கலை-வஸ்திரம், மதிப்பங்கு. பரிவட்டமுற-வஸ்திரமுற, பரிகள் மண்டிலமாகவோட. நேத்திரம்-பட்டாடை, கண். வத்திரம்-வஸ்திரம், முகம்.

குலவுவடக்குத்திசைக்கிறைவன்கோதிலாதநவநிதியன்
கொண்டல்வாகன்றன்பதியுங்கோலச்செம்பொனகவுள்ளா
னிலவுவேதன்றானுமிரணியகருப்பனவற்றந்த
நெடுமால்கோடிபொன்னுடையானீலகண்டன்வெள்ளிமலை
வலமுற்றிருப்போனன்றியும்பொன்மலையாளுரியோனிவர்கள்வந்து
வாங்காதவர்கள்பலவளங்கண்மலிந்தோங்கியதென்முகவையெனுந்
தலமான்முத்துராமலிங்கத்தமிழ்தேர்துரையாஞ்சேதுபதி
தான்செய்மணத்திலிருநிதியுந்தந்தானெவரும்வாங்கினரே.

இரணியகருப்பன்-பொன்மயமான கருப்பத்தையுற்றவன். பொன்னுடை-பீதாம்பரம். பொன்மலையாளரியோன்-பொன்மலையை ஆள்கின்ற உரிமையுடையோன், உமாதேவிக்குநாயகன்.

இவர் ஒரு மகாமகத்துக்கு வந்தபோது அக்கவிராயர்கூறியது :—

பரவுவர்கொள்பயநீக்கிவருணனைமுத்தகங்கொண்டுபாருள்ளாரெண்
மருவுதிருவணையுறச்செய்தக்காற்றேரிராவணனைமதனல்வென்றங்
குராவுறுமம்பலவாணர்மெச்சுசேதுபதியாய்க்குலவித்தேவை
வருமுத்துராமலிங்கன்ராமனைப்போன்மாமகத்துவந்திட்டானே.

இராமனைக் குறிக்கும்போது, பரவுவர்கொள்பயநீக்கி-பரவுகின்றகடல் கொண்டநீரை அக்கினியம்பாலே நீக்கி. வருணனைமுத்தகங்கொண்டு-வருணன்கொடுத்த அழகிய முத்தாரத்தை மனத்தங்கீகரித்து. பாருள்ளாரெண்மருவு திருவணையுறச்செய்து-உலகிலுள்ளாரெல்லாமெண்ணத்தக்க திருவணையை மிகச்செய்து. அக்காற்றேரிராவணனைமதனல்வென்று—அந்தக்காலத்திற் றேரேறிவந்த இராவணனை வலியால் வெற்றிகொண்டு. அங்குராவுறுமம்பலவாணர்மெச்சுசேதுபதியாய்க்குலவி- அங்கெஅறிவுடையாராகிய அழகிய பல அன்புடையார் மெச்சுகின்ற சேதுவுக்கு நாயகனாய்விளங்கி என்றும், முத்துராமலிங்கசேதுபதியைக் குறிக்கும் போது, பர...நீக்கி-துதிக்கின்றவர்கொண்டபயத்தையகற்றி. வரு...கொண்டு—புலவர்கூறும் வருணனையோடுகூடிய முத்தகச்செய்யுளையும் கொண்டு. பா.......செய்து—உலகத்திலார்ந்த எட்டாகமருவிய இலக்குமியைத் தன்னுடன்பொருந்தச்செய்து. அக்.......வென்று-அந்தத்தென்றற்றேரையுடைய இராவண்ணனாகிய மன்மதனை அழகால் வெற்றிகொண்டு. அங்............குலவி-அழகியகுருத்தன்மையுறும் அம்பலவாணதேசிகர்மெச்சத்தக்க சேதுகாவலனாய் விளங்கியென்றும் பொருள் கொள்க. மாமகத் துவந்திட்டான்என்பதற்கு இராமனைக்குறிக்கும்போது பெரியயாகத்திலவதாரமானனென்றும், சேதுபதியைக்குறிக்கும்போது மகாமகத்திருநாளில் வந்தான் என்றும் பொருள் கொள்க. இட்டான் எனவும்பிரித்து யாவருக்குங்கொடுத்தானென்றும்பொருள்கொள்ளலாம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனதிபதியாயிருந்த பாண்டித்துரை ஒரு மாமகத்துக்கு வந்திருந்தபோது அக்கவிராயர் கூறியது :—

அலமருவார்கலியடக்கலாற்கோவில்வளைகையுறலான்மாச்செண்டு
செலவிடலால்வரையில்வருபொன்கொளலாற்றென்மதுரைதிகழ்தலானன்
னலமுறவங்குரவாரமம்பலவாணரையுள்ளநயத்தலானின்
னிலகுபெற்றோர்தேவைமன்னுவுக்கிரபாண்டியனெனநிற்கிசைத்தார்பேரே.

உக்கிரபாண்டியனைக்குறிக்கும்போது, அலமருவார்கலியடக்கலால்-சுழலுகின்ற ஆர்கலியாகிய கடலை அடக்குதலால். கோவில்வளைகையுறலால்-இறைவனுறகொடுத்தசக்கரத்தைக் கையிறபொருந்தலால் வரையில் மாச்செண்டு செலவிடலால்-பெரிய செண்டு என்னு மாயுதத்தால் மேருவரையில் அடித்தலால். வருபொன்கொளலால்-அடித்தபின்பு அவ்வரையாற் றனக்குவருகின்ற பொருளை யெடுத்துக்கொள்ளுதலால். தென் மதுரைதிகழ்தலால்-அழகிய மதுரைப்பதியில் விளங்கியிருத்தலால். நன்னலமுறவங்குரவாரமம்பலவாணரையுள்ளநயத்தலால் — மிக்கநன்மையுற அங்கே அறிவுடையவராகிய பலகவிவாணரை யுள்ளத்தில் விருப்புறலால் என்றும், உக்கிரபாண்டித்துரையைக் குறிக்கும்போது, அலமருவார்கலியடக்கலால்-சுழன்றுதிரிவாராகிய இரவலர்வறுமையை அடக்குவதால். கோவில்வளைகையுறலால்-ஆலபத்தை வலம்வருதலுறுவதனால். மாச் செண்டுசெலவிடலால்-குதிரைகளை வையாளிவீதியிலேநடத்தலால். வரையில்வருபொன்கொள்லால்-அளவில்லாத வருகின்ற திரவியங்களைக் கொள்ளுதலால். தென்மதுரைதிகழ்தலால்-அழகியமதுவைப்போன்ற வசனம்விளங்குதலால். நன்னலமுறவங்குரவாரமம்பலவாணரையுள்ள நயத்தலால்-மிக்கநன்மையுறஅழகிய ஆசாரியராகிய அம்பலவாணரை மனத்தில் விரும்பலால் என்றும் பொருள்கொள்க. வருபொருள்-இறைப் பொருளுமாம்.

சேற்றூர்ச்சமீந்தார் ஒருமாமகத்துக்குவந்திருந்தபோது அக்கவிராயர் கூறியகவி.

பூமகத்தியங்களெல்லாந்தெரிந்தவதென்சேறைமன்னபுகழ்ந்தெந்நாளு
நாமகத்தின்புறுதுறைசைக்குருசாமிமன்னருக்குணவில்பன்னூல்க
டாமகத்தியந்தெரிந்தபோதனெனநின்னைமெச்சுந்தகைமையெல்லா
மாமகத்திங்குவந்தோரேவருமுரைத்தாராலுமடங்காதன்றே.

பூம—பூமானே. கத்தியம்—கதைகள்.

இவர் ஒருபுலியைச்சுட்டபோது அக்கவிராயர் கூறியது.

அலகிலுயிர்ப்பயிர்விளைக்கும்வானதிலோரம்புலிபொன்னம்பலத்தா
னிலகுநடம்பலவுயிர்க்கீந்தளிக்குமொரம்புலியுலகிலினிநீவாழும்
பலவுயிரைவதைத்திடலாலம்புலியாகாயுன்னைப்பார்மேல்வைப்ப
தில்லையெனவோர்புலியினைச்சுட்டான்சேறைச்சுந்தரதாசென்கோமானே.

சிங்கம்பட்டிச்சமீந்தார் ஒருமாமகத்துக்கு வந்திருந்தபோது அக்கவிராயர் கூறியது :—('தென்னாட்டுப்புலி' என்பது சிங்கம்பட்டிச்சமீந்தார்பட்டப்பெயர்.)

தாயினுநல்லாய்தென்னாட்டுப்புலிநீவேறில்லாத்தகைமையோர்ந்து
வேயினுமென்றோள்பெறுமானின்னுறவுகொண்டிருக்கும்வேளையெங்கும்
பேயினும்விடாதுதென்பாலொருசிறுகாற்புலிபாய்ந்துபுகிலென்செய்வா
ளேயினுநின்பெயர்க்கீதுதகுமோசுப்பிரமணியவிறைவரேறே.

மூன்னாட்டுவாகனங்கொள்சாமிநயபைங்கரப்பொருளைமுன்னாட்டங்தோன்
றன்னாட்டுக்கால்விரும்பிப்பணிபுலிபோற்பணிந்துதென்பாற்றங்கலானுங்
கன்னாட்டும்படியெதிர்த்தோர்தமைப்புலியேயென்னவெல்லுகையினாலுந்தான்
றென்னாட்டுப்புலியெனப்பேர்பெற்றாய்சுப்பிரமணியசெயசிங்கேறே.

பேரையூர்ச்சமீந்தார் சேற்றூரில்அதிகாரஞ்செய்யவந்திருந்தபோது என்னை உங்கள் மன்னரைப்போலச்சொல்கின்றீர்களா? எனக் கேட்க அக்கவிராயர்கூறியவெண்பா :—

சேற்றூராண்மன்னன்றிருவனென்போரிங்ஙனில்
வேற்றூராண்மன்னனெனவிள்ளார்கள்—போற்றுலகில்
நாகையசாமியெனநன்னுமநீகொண்ட
தாகையினாலேதிருவனும்.

பாற்கரசேதுபதிமகாராசா சேற்றூருக்கு வந்தபோது அக்கவிராயர் கூறியகவி.

மேனாட்டுத்தேவகுலத்துபேந்திரனுவருமொருமால்வேந்தர்மெய்க்கப்
பூநாட்டுத்தேவகுலந்தன்னிற்பாற்கரவிறையும்புகழும்வாய்மை
தானாட்டுஞ்சுந்தரதாசரசுமாவுதித்ததற்கோர்சான்றேதென்னின்
மாநாட்டுஞ்சேதுபதிவடமலைத்திருவனெனப்பேர்வாய்ந்ததாமே.

சுந்தரதாசு, வடமலைத்திருவன் இவ்விருபெயருஞ் சேற்றூர் மன்னர்க்குப்பெயர்.

எங்குமாஞ்சிவத்தின்வியாபகமுமுயிர்பாசமெனுமிரண்டுங்கூடித்
தங்கும்வியாத்தியுமவைகள்சிவத்தின்வியாப்பியமாகுந்தன்மையுஞ்சொற்
பொங்குபன்னூலாலுணர்ந்துமெய்ஞ்ஞானச்சனகனைப்போற்புவியைக்காக்குந்
துங்கன்பாற்கரசேதுமன்னனைப்போற்புவியிலெவர்சொல்லுங்காலே.

வேம்புத்தூர்ப் பிச்சுவையரை நோக்கிச் சேற்றூர்ச்சமஸ்தான வித்துவான் இராமசாமிக்கவிராயர் 'கழுதையைப்பெற்றானன்றாங் காண்' என ஈற்றடியெடுத்துச்சொல்ல, அவர் கூறிய வெண்பா.

சாரமுள்ளகாமரசஞ்சற்றுமறியாதமட
வாருடனேகூடிமகிழ்தலினு—மீர
விழுதையுணியும்மால்கொளின்பநல்லார்காவி
கழுதையைப்பெற்றானன்றாங்காண்.

திருவாவடுதுறையாதீனமகாசந்நிதானமாகிய சுப்பிரமணிய தேசிகமூர்த்தி சேற்றூர்ச் சமஸ்தானவித்துவான் கந்தசாமிக்கவிராயரைநோக்கி இந்தச்சந்திரனைப்பற்றி யொருகவி சொல்லவேண்டுமென்றபோது கூறிய கவி. [இக்கவிராயர் இச்சந்நிதானத்துடன்கற்றவர்—இராமசாமிக்கவிராயர்தமையனார்.]

வாடிவருவார்க்கனையாஞ்சற்குருசுப்பிரமணியமாதவன்றான்
கோடிநிதியாவருக்குங்காவலர்பெற்றிடக்கொடுக்குங்குணத்தினாலே
நாடிநமதணிமதியுங்கலாநிதியென்றுவந்துநம்மைநல்கவெண்ணித்
தேடிலென்செய்குவமென்றேதிங்களுமந்தரத்தோடித்திரிகின்றானே.

சேங்கோட்டைக்கு மேற்கேயிருக்கிற ஆரியங்கா ஐயனார்பேரிலே பூழியன்குடிப் புலவர் கூறியகவி.

ஊராரைப்பின்சொல்லியுற்றாரைப்பின்சொல்லியொன்றெனினுந்
தாராரைப்பின்சொல்லித்தந்தாரைப்பின்சொல்லிச்சற்றுமுகம்
பாராரைப்பின்சொல்லிப்பார்ப்பாரெனச்சொல்லிப்பாழ்த்தகும்பிக்
காராரைப்பின்சொல்லுவேன்றிருவாரியங்காவையனே.

(தொடரும்.)   இங்ஙனம்,

திருவாவடுதுறையாதீனவித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமான,
சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

உ

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(௫௫௨—ஆம் பக்கத் தொடர்ச்சி.)

81. "பாக்கி யம் எனக்(கு) உள(து) என நினை(வு) உறும் பான்மை
போக்கி நிற்(கு) இது பொருள் என உணர்கிலேன் ; புவனம்
ஆக்கி, மற்றவை அகிலமும் மணி வயிற்(று) அடக்கிக்
காக்கும் நீ ஒரு வேள்வி காத் தனை எனும் கருத்தே !"

இ - ள். "(என் வேள்வியை நீர்சாக்கும்) பாக்கியம் (நான் முன் செய்த தவத்தால்) எனக்கு உள்ளது (ஆகியது) என்று நினைப்பதை விட்டு, உமக்கு இது (சாதிக்கத்தக்க) காரியமென்று நினைக்கிறேனிலேன; (ஏனெனில்) அகிலாண்டங்களையும் சிருட்டித்து அவைகளைப் பிரளய கால ஆபத்துக்குத் தப்பும்படி) திருவயிற்றினுள் அடக்கி (வைத்து)க் காக்கும் (அவ்வளவு அபாரவல்லபமுடைய) நீர்! சிறியவேள்வியை (க் கடைபோகக்)காத்தீரென்று கருதும்கருத்து (மனத்தில் உண்டாமோ! உண்டாயின் அது எவ்வளவு பேதைமையானது!")

நினைவுறும் பான்மை - நினையும் தன்மை. போக்கி - நீக்கி - விட்டு; அன்றி யெனலுமாம். பொருள் - காரியம்; (உ - ம்) "துணிபெவனோ பொருள்விளங்கச் சொல்லென்றான்." சேதுபு. பிரமகத். உஉ. (சங்க. அகராதி). 'கருத்தே' என்பதற்கு வினைமுடிபு இல்லாமல், வேண்டு மென்றே விடப்பட்டிருக்கிறது. மனம் அவசமுறுங்கால், சொல்லக் கருதியதில் ஒருபகுதியைச்சொல்லி, சொல்லாமலே அறிந்துகொள்ளக் கூடிய எஞ்சிய பகுதியைச் சொல்லாதுவிடுதல் உலகவழக்கிற்போலச் செய்யுள்வழக்கிலும் உண்டென்பதற்கு இஃது ஓர் உதாரணமாம். பாரதத்தில், கன்னன் மரணத்தகாலத்தில், "மாதவத்தால் ஒரு தமியன் வாழ்ந்தவாறே" என்பது மற்றோருதாரணம். பிற பல உள. வந்துழிக் காண்க.

பாலகாண்டம் பதிப்பித்தாருள் ஒருவர் மேற்கூறிய 'கருத்து' என்ற முடிபில்லாததை 'உளத்து ஆகுமா' என்றும், மற்றொருவர் 'எப்படி உண்டாகும்' என்றும் கூறி முடித்திருக்கின்றார்கள்.

[என்று விசுவாமித்திரர் கூறினர். எல்லாரும் அன்று அங்கே தங்கியிருந்தார்கள். மறுநாள் இராமர், "இனி எனக்குக் கட்டளை யாது?" என, முனிவர் "நீர் செய்தற்கரியது ஒன்றுமில்லை. பெரிய காரியங்கள் பின் முடிக்கவேண்டுவன இருக்கின்றன. இப்போது மிதிலை அரசர் செய்யும் வேள்வியைப் பார்க்கப் புறப்படுவோம்" என்றார்.]

அகலிகைப்படலம்.

[அவ்வாறே புறப்பட்டுப் பல ஆறுகள் சோலைகளைக் கடந்து]

௪௨. பள்ளி நீங்கிய பங்கயப் பழன நன் நாரை
வெள்ள வான் களை களைவுறு கடைசியர் மிளிர்ந்த
கள்ள வாள் நெடும் கண் நிழல் கயல் எனக் கருதா
அள்ளி நாண் உறும் அகன் பணை மிதிலை நா(டு) அடைந்தார்.

இ - ள். நித்திரைநீங்கிய தாமரை (கள் மலிந்த) வயலில் (உள்ள) நாரை, (அந்த வயல்) நீரில் (முளைத்த) களைகளைப்பிடுங்கும் பள்ளிகளது கண் நிழலை (த் தூக்கமயக்கத்தில்) மீனென்று கொத்தியெடுத்து (மீனல்லாமையால்) நாணுகின்ற மருதநிலம் (சூழஉள்ள) மிதிலாநகரத்தை (த் தன்னிடத்தே) உடைய (விதேக) நாட்டை (அவர்கள்) அடைந்தார்கள்.

பள்ளி - நித்திரை. பழனம் - வயல். வெள்ளம் - நீர். வான் - பெருமை; இங்கே மிகுதியைக்குறித்தது. கடைசியர் - பள்ளப்பெண்கள். மிளிர்தல் - பிரகாசித்தல். கள்ள - கள்ளத்தன்மையுள்ள. வாள்-ஒளி. கயல் - கெண்டைமீன். அகன் - அகன்ற. பணை - மருதநிலம்.

களைபிடுங்கும் மாதர் கண் நிழல் அக்களைகள்உள்ள நீரிலே தோன்ற, அதனை மீனென்றெண்ணி நாரைகள் மயங்கின என்பதற்குப் பொருத்தமாகக் களைக்கு 'வெள்ள' என்ற அடைகொடுத்ததும்,—மாதர்கண் மீன் போல்வனவாதலால் அவர் கண்நிழல் மீன்போலத்தோன்றி மீனென மயங்குகற்கேதுவாயிருப்ப, அவ்வேதுவைப் பலப்படுத்த நாரைக்குப் 'பள்ளிநீங்கிய' என்ற அடைகொடுத்ததும் கவனிக்கத்தக்கவை.

83. வரம்(பு) இல் வான் சிறை மதகுகள் முழ(வு) ஒலி வழங்க
அரும்பும் நாள் மலர் அசோகுகள் அலர் விளக்(கு) எடுப்ப,
நரம்பின் நான்ற தேன் தாரை கொள் நறுமலர் யாழின்
சுரும்பு பாண் செயத் தோகை நின்(று) ஆடுவ சோலை.

இ-ள். (அந்த விதேகநாட்டிலே) சோலைகளிலே (உள்ள) குளங்களின் மடைகள் (அவற்றின்வழியே நீர்செல்லும் ஒலியாகிய) மத்தளமுழக்கம் செய்ய, அசோகமரங்கள் மலர்கள் (ஆகிய) விளக்குகளை ஏந்த, வண்டுகள் யாழ்போல இசைபாட மயில்கள் (தோகைவிரித்து) நின்று கூத்தாடும்.

வரம்பு இல் - அளவில்லாத. வான் - பெரிய. சிறை - குளம். அரும்பும் - அரும்புகின்ற - தோன்றுகின்ற. நரம்பின் - நரம்பைப் போல. நான்ற - தொங்கி (நூற்போல ஒழுகி)ய. தாரைகொள் - ஒழுக்கைக்கொண்ட. யாழின் - யாழ் (ஓசை) போல். பாண்செய - இசைபாட. பாண் - இசைப்பாட்டு. தோகை - மயில். சோலை - சோலையில்; ஏழன் உருபு தொக்கது.

மரங்கள் நெருங்கி நிழல் மிகுந்து பகலும் இரவுபோலத்தோன்றும்படி இருண்டசோலை,—மதகோசை மத்தளவோசை ஆக, மலர் விளக்கு ஆக, வண்டிசை பாட்டு ஆக, மயில் ஆடல் கூத்தியராட்டமாக,—இரவில் சதுர்நடக்கும் நடனசாலைபோன்றதென்பது கருத்து. இப்பாட்டு நாட்டுப்படலத்தில் "தண்டலை மயில்களாட" என்ற பாட்டுப்போன்றது.

84. பட்ட வாள் நுதல் மடந்தையர் பார்(பு) எனும் தூதால்
எட்ட ஆதரித்(து) உழல்பவர் இதயங்கள் வெறுப்ப,
வட்ட நாள் மரை மலரின் மேல் வயல் இடை மள்ளர்
கட்ட காவிகள் கண் கடை காட்டுவ கழனி.

இ-ள், (அந்த விதேகநாட்டு) வயல்களிலே மாதரது பார்வையாகிய தூதினால் (அழைக்கப்பட்டு அவரை) அடையவிரும்பி (ச் சமயம் பார்த்து)த் திரிகின்ற ஆடவர்கள் மனம்வெறுக்கும்படியாகத் தாமரைமலர்மேல் மள்ளர் பறித்தெறிந்த குவளைமலர் (பிறமாதர் பார்ப்பதுபோலக்) கடைக்கண் காட்டும்.

பட்டம் - (பொற்)பட்டம். வாள் - ஒளி. நுதல் - நெற்றி. பார்ப்பு - பார்வை. ஆதரித்து - விரும்பி. உழலல் - அலைதல். நாள் மரை மலர் - அன்றுபூத்த தாமரைமலர். மரை - தாமரை; முதலெழுத்துக் குறைந்துவந்தது. காட்டுவ - காட்டுவன. கழனி - கழனியில் வயலில்; ஏழாம் வேற்றுமை உருபு தொக்கது. தாமரைமலர்மேல் குவளையலர் கிடத்தல் மாதர்முகத்தில் - கண் விளங்குதலுக்கு உவமானம்.

85. தூவி அன்னம் தம் இனம் என்று நடை கண்டு தொடரக்
கூவும் மென் குயிற் குதலையர் குடைந்த தண் புனல் வாய்
ஓ(வு)இல் குங்குமச் சுவ(டு)உற, ஒன்றொ(டு)ஒன(று) ஊடிப்,
பூ உறங்கினும், புள் உறங் காதன பொய்கை.

இ - ள். (அந்த நாட்டுப்) பொய்கைகளிலே, மாதர்கள் குளித்த நீரிலே, (அம்மாதர் பூசியிருந்த) குங்கும(ம் தோய, அக்குங்குமம்பட்ட) அடையாளம் (சேவல்களும் பேடைகளும்) பொருந்த, (நிறம் மாறியதன் காரணம் அறியாமல், இச்சேவல் என் சேவலன்று இப் பேடை என் பேடையன்று என்று கருதித் துணைப்) பறவைகள், ஒன்றோடொன்று ஊடல்செய்து, (இரவில் அந்தக்குளத்துத் தாமரை) மலர்கள் (இதழ் குவிந்து) உறங்கினாலும், உறங்காதிருப்பனவாம்.

தூவி - இறகு. மெல் குயில் குதலையர்-மென்மையான குயிலோசை போலும் மழலைமொழிகளையுடைய மாதர்கள். குடைந்த - குளித்த. புனல் வாய் ஓய்வு இல் — நீரில் (கலந்து அதனினின்று) நீங்குதல் இல்லாத. சுவடு - அடையாளம். பொய்கை - மானிடர் ஆக்காத நீர்நிலை. தொடர(ச் சென்று) குடைந்த எனக் கூட்டுக.

மலர் கண்ணுக்கும் மலர்மடல் கண்மடலுக்கும் மலர்மடல் ஒன்றோடொன்று பொருந்தல் கண்மடல்கள் பொருந்தலுக்கும் ஒப்பாம். இதனை உட்கொண்டு, கவி, இரவில் தாமரைமலர்கள் குவிவதனை அம் மலர்கள் உறங்குவதாகக் கூறிய நயம் பாராட்டத்தக்கது.

86. படை நெடும்கண் வாள் உறைபுகப் படர் புனல் மூழ்கிக்
கடைய முன் கடற் செழும், திரு எழும்படி காட்டி,
மிடையும் வெள் வளை புள்ளொடும் ஒலிப்ப, மெல் லியலார்
குடைய, வண்(டு) இனம் கடி மலர் குடைவன குளங்கள்.

இ - ள். (அந்த நாட்டுத்) தடாகங்களிலே, மாதர்கள், கண்களாய வாளாயுதங்கள் இமைகளாகிய உறைகளிலே புகும்படி நீரில் முழுகி, முன் (காலத்தில் தேவர்கள்) கடல் கடைய (அதனின்றும்) திருமகள் மேலெழுந்த தன்மையை (அந் நீரில் முழுகிய தாம் அந் நீரின்மேலெழுத லால்) காட்டி (அத் தடாகங்களில்) குடைந்துகொண்டிருக்க, வண்டு கள், (அங்குள்ள) மலர்களைக் குடையா நிற்பனவாம்.

'நெடுங்கண்வாட்படை' யெனவும் 'முன்கடல் கடைய'எனவும் கூட்டுக. படர் புனல் - பரவியநீர். மிடையும் - நெருங்கிய. குடைதல் - 1. நீராடுதல்; 2. (வண்டுகள் தேனுக்காகப் பூக்களைக்) குடைதல்.

நீராடும்போது இயல்பாகக் கண்மூடுதலைக் 'கண் வாள் உறை புக என்று நயம்படக் கூறினர். நீருள் முழுகின மாதர் எழுதலைப் பாற் கடலில் திருமகள் எழுந்ததுபோலுமென, (உவமான உவமேயங்களாகிய) இருகாட்சிகளும் நம் மனக்கண்ணெதிரே தோன்றும்படி கூறிய வனப்பு நோக்கத் தக்கது. 'பூ உறங்கினும் புள் உறங்காதன பொய்கை' என் பதனிலும் 'மெல்லியலார் குடைய வண்டினம் கடிமலர் குடைவன குளங்கள்' எனபதனிலும் இனிதாகப் பொருள் வேறுபடச் சொற்களை அடுக்கியிருக்கும் கவி சாதுரியம் கவனிக்கத்தக்கது.

[அந்த விதேக நாட்டிலே அவர்கள் சிறிது தூரம் சென்று மிதிலை நகரத்துக்கோட்டையை அடுக்க உற்றபோது, அங்கே கல்லுருவாயிருந்த அகலிகை, இராமபிரான் பாததூளிபடவே, தொல்லுருவாகிநிற்க, முனிவர் "இவள் கௌதமர்மனைவி" என, இராமர் "இவள் இவ்வாறுவானேன்?" என, அவர் "இந்திரன் இவளை இச்சித்துக் கௌதமரைக் கிருகத்தி னின்று வெளியே போம்படி உபாயம் செய்து அவர் வடிவத்தோடு உள்ளே புகுந்து தன்னைக்கௌதமரென்று நம்பிய இவளைச்சேர்ந்திருந்த சமயத்தில், கௌதமர் வந்து, அவனைக் கண்டார்நகைக்கும் விகார உரு அடையும்படி சபிக்க அவன் விகார உரு அடைந்து வெட்கப்பட்டு ஓடிப்போக, பின்பு இவளைக் கல்லாகும்படி சபிக்க, இவள் 'அச் சாபத் துக்கு முடிவு அருள்க' என, 'இராமர் கழலிலொட்டிய புழுதிபட்டிட முடிவாம்' என்றார். பின்பு, தேவர்வேண்ட, இந்திரன் விகாரஉரு நீங்கி ஆயிரங்கண்ணனாக அநுக்ரஹித்தார்." என்று பின்னுங் கூறுவார்.]

வேறு.

87. "இவ் வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனி இந்த உலகுக் கெல்லாம்,
உய்வண்ணம் அன்றி, மற்(று)ஓர் துயர்வண்ணம் உறுவ(து) உண்டோ?,
மைவண்ணத்(து) அரக்கிபோரில்,மழைவண்ணத்(து) அண்ணலே,உன்
கை வண்ணம் அங்குக்கண்டேன் கால்வண்ணம் இங்குக்கண்டேன்!"

இ - ள். "இந்த வண்ணம் நடந்தவண்ணம் (என்று தெரிவீராக. இவளுக்குச் சாபம் நீக்கி அருளிய உமது பாத மகிமையால்) இனிமேல் இந்த உலகத்தாரெல்லாருக்கும் உய்யும்வண்ணமன்றி நையும்வண்ண மொன்றும் உண்டாகுவதில்லை. (மெய்யின் வண்ணம்) மையின்வண்ண மான தாடகை யுத்த (ம் நிகழ்ந்த அந்தஇட) த்திலே உமது கையின் வண்ணத்தைக் கண்டேன்! (அகலிகை சாபநீக்கம் நிகழ்ந்ததை)இந்த இடத்திலே உமதுகாலின்வண்ணத்தைக் கண்டேன்!" (என்றான்).

'வண்ணம்' என்பது, 'இவ்வண்ணம்' 'நிகழ்ந்தவண்ணம்' என்பவைகளில் விதத்தையும், 'உய் (யும் - உச்சிவிக்கும்) வண்ணம்' 'துயர் (துயரும் - துன்பம் உறும்) வண்ணம்' என்பவைகளில் ஆறு அல்லது வழியையும், 'மைவண்ணம்' 'மழைவண்ணம்' என்பவைகளில் நிறத்தையும், 'கைவண்ணம்' 'கால்வண்ணம்' என்பவைகளில், குணம் அல்லது தன்மையையும் குறித்தல் காண்க.

இந்தப்பாட்டுக்குப் பல பாட்டுகளுக்கு முந்திய "அவ்வுரை இராமன் கூற அறிஞனும் நோக்கி" என்றபாட்டிலுள்ள 'நோக்கி' என்ற வினையெச்சம் இப்பாட்டில், 'கண்டேன்' என்ற வினைமுற்றுக்கொண்டு முடிகின்றதேயன்றி, 'அறிஞன்' என்றபடர்க்கை எழுவாய்க்குப் பயனிலை இல்லை. 'என்றான்' என்று பயனிலை வருவித்து முடிபுசெய்க. இவ்வாறே இத்திரட்டு 85-ம்பாட்டில் 'தொடர (ச்சென்று) குடைந்த' என்று 'சென்று' என்ற சொல் வருவித்து முடிவுசெய்யவேண்டியிருந்தது காண்க.

மிதிலைக்காட்சிப்படலம்.

[பின்பு அவர்கள் அகலிகையைக் கௌதமரிடம் சேர்த்துவிட்டு, வழிச்சென்று மிதிலை நகரத்து மதிலைக் கண்டார்கள்.]

88. "மை அறு மலரின் நீங்கி, யான் செய் மா தவத்தின் வந்து
செய்யவள் இருந்தாள்" என்று, செழுமணிக் கொடிகள் என்னும்
கைகளை நீட்டி, அந்தக் கடி நகர், கமலச் செங் கண்
ஐயனை, "ஒல்லை வா!" என்(று) அழைப்பது போன்ற(து), அம்மா!

இ - ள். (அப்போது, அந்த மதிலுக்கு மேலாகத் தோன்றிய கொடிகள் காற்றால் அலைந்தது,) அந்த நகரம் (ஆகிய பெண்), "இலக்குமிதேவி (எப்பொழுதும் வசிக்கும்)செந்தாமரைமலரினின்று நீங்கி (ச்சீதாதேவியாகி) யான் செய்த பெரும் புண்ணியத்தினால் (என்னிடம்) வந்திருக்கின்றாள்" என்று கைகளை (உயர) நீட்டி (அசைத்துச் சைகை செய்து திருமாலாகிய) இராமபிரானை (அவளை அடையச்) "சீக்கிரம் வருவீராக" என்று அழைப்பதுபோன்றிருந்தது.

மை அறு - குற்றமற்ற. மலரின் - (செந்தாமரை) ப் பூவினின்று. செய்யவள்-இலக்குமி. கடிநகர் - காவலையுடைய நகரம். ஒல்லை-சீக்கிரம்.

89. நிரம்பிய மாடத்(து) உம்பர் நிரை மணிக் கொடிகள் எல்லாம்,
தாம் பிறர் இன்மை உன்னித் தருமமே தூது செல்ல,
வரம்(பு)இல்போழகினானை மணம்செய்வான் வருகின்றான் என்(று),
அரம்பையர் விசும்பின் ஆடும் ஆடலின், ஆடக் கண்டார்.

இ - ள். (அன்றியும் அந்தக்) கொடிகள், (தூதுபோதற்கு) வேறொருவரும் தகுதியில்லாமையை உட்கொண்டு தருமதேவதை தானே தூதுபோ (ய் அழைக்)கச், சீதாதேவியைக் கல்யாணம் செய்வார் (ஆகிய இராமபிரான்) வருகின்றாரென்று (மகிழ்ந்து) அரம்பையர்கள் வான(ரங்க)த்தில் ஆடுதல் போல ஆட, (அக் கொடிகள்) ஆடலை (அவர்கள்) கண்டார்கள்.

நிரம்பிய-(சிற்பசித்திரவேலைப்பாடுகள்) நிறைந்த. மாடத்து உம்பர் - மாளிகைகளின்மேல். நிரை - வரிசை. தரம் - தகுதி. வரம்பு இல் - எல்லையில்லாத. ஆடலின் - ஆடலைப்போல.

90. ஆதரித்(து) அமுதில்கோல்தோய்த்(து) அவயவம் அமைக்கும் தன்மை
யா(து)எனத்திகைக்கும்அல்லால்,மதனற்கும்எழுதலொண்ணச்
சீதையைத் தருத லாலே திருமகள் இருந்த செய்ய
போ(து)எனப் பொலிந்து தோன்றும் பொன்மதில் மிதிலை புக்கார்.

இ - ள். (அழகின் தன்மையை அறிதலிற் சிறந்த மன்மதன், "வரம்பில் போழகினாள்" ஆகிய சீதையின் வடிவத்தைச் சித்திரிக்க இயல்பாக) ஆசைபூண்டு, (தனது சித்திரம் எழுது) கோலை (அமிழ்தமே தக்க வர்ணப்பொருளென்று) அமிழ்தத்திலே தோய்த்து (அவளது) அவயவங்களை (ச் சித்திரத்தில் புலப்பட) அமைக்கும்வகை எவ்வகை

என்று திகைப்பானேயல்லாமல், (அந்தமன்மதனாலும் சித்திரிக்கக்கூடாத சீதை (யாகிய இலக்குமி)யை (க் காண்போர் களிக்க) அளித்ததனால் இலக்குமி (காண்போர்களிக்க) வீற்றிருக்கின்ற சிவந்த (தாமரை) மலர் போல விளங்கும் மிதிலைநகரத்தினுள்ளே (அவர்கள்) பிரவேசித்தார்கள்.

ஆதரித்து - விரும்பி. திகைக்கும் - திகைப்பான். செய்ய - 1. சிவந்த; 2. அழகிய.

'திகைக்கும்' என்பது 'செய்யும்' என்னும் வாய்பாட்டுவினை முற்று. இவ்வாய்பாடு, 'அது செய்யும்' 'அவைசெய்யும்' என உலக வழக்கிலும் இவைகளல்லாமல் 'அவன் செய்யும்' 'அவள் செய்யும்' எனச் செய்யுள்வழக்கிலும் வழங்கும்.

91. சொற் கலை முனிவன் உண்ட சுடர் மணிக் கடலும் துன்றி
அற் கலந்(து) இலங்கு பல் மீன் அரும்பிய வானும் போல,
விற் கலை நுதலி னாரும் மைந்தரும் வெறுத்து நீத்த
பொற் கலன் கிடந்த மாட நெடுந்தெரு வதனிற் போனார்.

இ - ள். அகஸ்தியர் குடித்த (காலத்தில் நீர்வற்றித் தரை தெரிய அற்றபோது வெளியாய்ப்) பிரகாசித்த இரத்தினங்களையுடைய கடலை யும் இரவில் நக்ஷத்திரங்கள் தோன்றப்பெற்ற வானத்தையும்போல, ஆடவரும் மகளிரும் (செல்வ மிகுதியால் புதிபனபுதியனவாக ஆபரணங் கள் அணியும்போது) வெறுத்துக் களைந்தெறிந்த (பழையனவாகிய, இரத்தினமிழைத்த) பொன்னாபரணங்கள் கிடந்த தெருக்கள் வழியே அவர்கள்) சென்றார்கள்.

சொல் கலை முனிவன் - சொல்லாலாகிய நூல்கள் அல்லது சாத்தி ரங்களை அறிந்த அல்லது அருளிச்செய்த அகத்தியரிஷி. சுடர்மணி- பிரகாசிக்கின்ற இரத்தினங்கள். அல் கலந்து இலங்கு பல்மீன் - இர விற் பொருந்திவிளங்குகின்ற பல நக்ஷத்திரங்கள். வில் கலை நுதலினார்- 1. (வடிவத்தில்) வில்லைப்போன்ற பிரகாசத்தையுடைய நெற்றியை யுடைய மாதர்; 2. ஒளியையுடைய சந்திரகலை (-பிறை) போன்ற நெற்றி யை யுடைய பெண்கள்.

கடலும் வானமும் பரப்பினாலும் தெருக்களுக்கு உவமமாதல்காண்க.

(தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

உ

சோழன் மணக்கிள்ளி.

சோழன் மணக்கிள்ளியைப்பற்றி யான் செந்தமிழ் XX-ம் தொகுதி 43–46 பக்கங்களில் எழுதியதையும், அதனை மறுத்து உ. வே. திரு. நா. அப்பனையங்காரவர்கள் ஷை தொகுதி மூன்றும்பகுதியில் எழுதியிருந்ததையும் பெரியோர் பலரும் படித்திருப்பார்கள். அவர்கள் எழுதிய மறுப்பினால் எனது ஐயங்கள் தெளிவுறாமையால் அவற்றைப் பெரியார் நீக்குவரென்னுங் கருத்தால் அவைகளை வெளியிடுகிறேன். இவ்வாறு யான் எழுத முன்வந்தது சீற்றம் பொறாமை காரணமாக எழுந்ததென்று எண்ணாமலிருக்கும்படி வேண்டிக்கொள்வதோடு சேரன்செங்குட்டுவனாசிரியரது ஆராய்ச்சியின்றிறனைக் குறைகூற எழுந்ததாகவும் கொள்ளாதிருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். சேரன்செங்குட்டுவனாசிரியர் தாமே இவைகளெல்லாம் தம்மால் ஊகிக்கப்பட்டனவேயன்றி முடிவுடையனவல்லவென்றும், அவைகளை ஏற்றபெற்றி கொள்ளுமாறும் கூறுவதால் அவர்களுக்கு இவ்வாராய்ச்சியால் யாதொரு இழுக்கு மேற்படாதென்பதும் திண்ணம்.

ஸ்ரீமத் அப்பனையங்காரவர்கள் முதலில் ஒருகொள்கையை நிறுத்திக்கொண்டு அதற்குற்ற ஆதாரங்களைப் பின்னர்த் தேடுகின்றார்கள். கூறவேண்டியவைகளையெல்லாம் எடுத்துக்கூறி, அதனினின்றும் முடிவு கட்டுவது தான் நேர்முறையாகுமென் றெண்ணுகிறேன். இவர்கள் முடிவாகக்காட்டியவைகளாவன :—

1. மணக்கிள்ளி என்பது ஆண்பாற்பெயராகவே ஈன்றமகன் என்பதிற் பொருளெய்துமாறில்லை. மணக்கிள்ளிமகள் ஈன்றமகன் என்பதே பொருத்தமுடையதாம்; ஆகையால் மணக்கிள்ளி என்பது ஆண்பாற் பெயரென்பதே தகுதி என்பது.

2. உறந்தைச்சோழர், புகார்ச்சோழர் என இரண்டுகிளையினர் உண்டென்பது.

சோழன்மணக்கிள்ளி என்ற தொடரை நோக்கும்போது அது ஆண்பாற்பெயரென்பது யார்க்கும் புலனாகாதிராது என்றார்கள். மணக்கிள்ளி என்பதில், கிள்ளி என்பதுமாத்திரம் பால்குறிக்காதென்பது எல்லோர்க்கும் ஒப்பமுடிந்ததே. மணக்கிள்ளி என்ற தொடர்மாத்திரம் கொண்டு பால்குறித்தலும் இயலாதாம். நெடுங்கிள்ளி, திருமுடிக்கிள்ளி பெருவிறற்கிள்ளி என்பன ஆண்பாலை உணர்த்தினவேயெனின் இச்சொற்கள் முன்னுள்ள அடைமொழிகளால் வெவ்வேறுபொருள்களைத் தருகின்றன; கிள்ளியில் நீண்டவன் என்றும், கிள்ளிகளுள் முதன்மையானவனாய்ப் பட்டமெய்தியவன் என்றும், அதிகவல்லமையையுடைய கிள்ளி என்றும் ஆண்மக்களுக்குரிய செய்கைகளைக் காட்டுங் குறிகளைத் தம்மிடத்தே அடக்கிக்கொண்டிருக்கின்றனவாகையால் இவ்வடைமொழிகளே பாலைப்பகுத்தற்குப் பெருஞ்சாதனமாயிருக்கின்றன எனக் கூறல்வேண்டும். இங்ஙனமே இம் மணக்கிள்ளிக்கும் கொள்ளலாகாதோவெனின் மணத்திற்குரியபெயரோடு அழைக்கப்படுபவர் பெண்பாலாரே. சோழன்மணக்கிள்ளி என்றல்லவோ காணப்படுகிறதெனின் சோழன் என்றசொல்லே அவ்விடமிருந்ததென்று உறுதியாகக்கூறுவதற்கில்லை. மகாமகோபாத்தியாய: ஐயரவர்கள் முதலில் இவ்விடத்தைப் புள்ளிகளால் நிறைத்துச்சென்றார்களென்றும், பின்னரே இவ்வாறு அச்சிட்டார்களென்றும் எழுதியுள்ளேன். இவர்கட்கு இவ்வாறுகொள்ளக் காரணமாயிருந்தது ராசாங்கத்துக் கையெழுத்துப்பிரதியே. அது 1891-ம் ஆண்டுவாக்கில், காலஞ்சென்ற சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களது உதவியால் எழுதிப் புத்தகசாலைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சோணைமணக்கிள்ளி என்றிருக்கவேண்டியதைச் சோழன்மணக்கிள்ளி என்று எழுதியிருக்கவேண்டும் என்றுதோன்றுகிறது. இதுபொழுது அதனுண்மைகாண்பது இயலாதகாரியமாயிருப்பதால், பாலைநிச்சயித்தலும் முடியாதகாரியமாம்.

இனி, ஈன்ற என்ற எச்சத்தோடொட்டிவரும் மகன் என்ற சொல்லையுங் கூட்டி ஈன்றமகன் என்ற தொடரை யாராயுங்கால், ஈனமுதற் காரணமாயிருந்த சொல் யாண்டும் தொக்குநிற்கக் கண்டோமில்லை. அன்றியும், அந்த 'ஈன்ற' என்ற சொல் மணக்கிள்ளியென்பதைத் தழுவுதலன்றி மகள் என்ற சொற் பெய்யும்வரை காக்க வழக்கில்லை.

அப்பதிற்றுப்பத்துப்பதிகங்களுள்ளேயே 'ஈன்ற' என்ற மொழிகளெல்லாம் முன்னிற்கும் நல்லினி, பதுமன்றேவி, ஆவிக்கோமான்றேவி, பொறையன்பெருந்தேவி, அந்துவஞ்செள்ளை என்பவற்றைத் தழுவுகையில் இத்தொடர்க்குமாத்திரம் வேறுசொற்பெய்து முடிக்கக் காரணந்தானென்னை? இவர்கள் மணக்கிள்ளி மகளீன்றமகன் என நடுவில் ஒருசொற்பெய்து அதனைப் பொருளோடுபொருத்திக்காட்டி, சேரன் செங்குட்டுவனுக்குத் தந்தை நெடுஞ்சேரலாதன் என்றும், தாய் மணக்கிள்ளி ஈன்ற மகளென்றும் வெளிப்படுத்திச் சென்றனர் என்றார்கள். அச் சேரன்செங்குட்டுவனாசிரியர் தம்கொள்கை யூகித்தனவேயன்றி உறுதியுடையனவென்றுகூறினாரில்லையென முன்னரே குறித்துளேன்.

இனி, யான் வெளியிட்ட "கொள்கைக்குமே ஒருசொல் வருவித்துப் பொருள்கொள்ளவேண்டியிருக்கிறது; அது முன்னோ பின்னோ என்பது ஆராய்ந்தறியவேண்டிய" தென்றார்கள். இதற்கு வேறுவிடை கூறாது, முன்னரே பதிற்றுப்பத்துபபதிகங்களிலிருந்து காட்டியிருப்பதே போதியதென்றும், ஆண்டு எவ்வாறு ஆன்றோரால் கொள்ளப்பட்டிருக்கிறதோ அவ்வாறே இப்பதிகத்திற்கும் பொருள் கொள்ளவேண்டியதென்றும், அதனில் மறுப்புரைகாரருக்கும் தடையில்லையென்றுங் கூறி நிறுத்துகிறேன்.

மேலும், "மற்றொரு சான்றோடு மாறுகொள்ளுதலின், அக்கொள்கை வலியற்றதாகின்ற" தென்றும், " 'திகழொளிஞாயிற் றேழ்பரிநெடுந் தேர்ச்சோழன்றன்மக ணற்சோணையீன்றமக்கள் இருவருள் முன்னோன்' எனச் செங்குட்டுவனைக் குறிப்பித்தலானே, அவன்தந்தை நெடுஞ்சேரலாதனென்பதும், தாய் நற்சோணை என்பதும் தெள்ளிதிற் புலனாம். ஆகவே அவன்தாய் மணக்கிள்ளி யென்பது சிறிது மொவ்வாதாம்" என்றார்கள். முழுதும் உண்மையே. இவர்கள்கூற்றான, "திகழொளிஞாயிற் றேழ்பரிநெடுந்தேர்ச்சோழனே மணக்கிள்ளி என்பதற் குற்ற ஆதாரத்தை விளக்காதகாரண மென்னை? இவ்வாறு தாம்கூறவில்லை யென்பார்களாயின் அதுவே இவர்கள் எழுதிய உரைநடையினின்றும் தொனிப்பதாம். ஆயினும், ஆசிரியர் அடியார்க்குநல்லாரதானும், சூரியவங்கிசத்துச்சோழனென்றதைக் கவனியாததென்னவோ? ஞாயிற்றுச்சோழன் என்ற தொடருக்குச் சூரியவங்கிசத்துச்சோழன்

என ஆசிரியர் அடியார்க்குநல்லார்கூறிய உண்மையை வித்வான் ஸ்ரீமத் ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்கள் சந்திரவமிசத்திற்புகுந்து ஆண்டுவந்துள்ள திங்கட்சோழரினின்றும் பிரித்துக்காட்ட ஞாயிற்றுச் சோழரெனக் கூறினர் என விவரித்து அதற்குற்ற வாதாரங்களுங் காட்டுகின்றனர். ஆகவே ஞாயிற்றுச்சோழன் என்பது சூரியவமிசத்திலே வந்த கீர்த்திவாய்ந்த அப்பொழுதாண்ட மன்னன என்று பொருள்படுவதல்லது மணக்கிள்ளி ஆகாதது காண்க. இதுவன்றி யானமுன்னர்க் காட்டிய 'சோழன' என்பது 'சோணை*' என்ற சொல்லாயிருக்கவேண்டுமென்றதற்கும் 'சோணையின்றமக்கள் இருவருள்' என்பது ஒருதலையொத்தலையுங் கவனிக்கவேண்டுகிறேன்.

இதுகாறும் கூறியதுகொண்டு மணக்கிள்ளி என்பது ஆண்பாற் பெயராகாது என்று துணியலாம்.

இனி, இரண்டாவதான உறந்தைச்சோழர், புகார்ச்சோழர் பிரிவுகளைப்பற்றி அவர்கள் ஆராய்ந்து கண்ட முடிவாவது :—"மதுரை, வஞ்சிபோன்று சோழர்க்கு ஒரு நகரமில்லாது இருநகர்கள் இருப்பதான் இருநகர்களினும் அரசர்கள் ஆண்டுவந்திருக்கவேண்டுமென்பதும், பலவரசர் ஒரேவமிசத்தில் ஏககாலத்தில் இருந்தவராகக் காணப்பட்டுச் சரித்திரவொற்றுமைபெறுவதில் மயக்கங்கொள்ளநேருமாகையால் இருவேறு பிரிவினராய சோழர்கள் ஆண்டுவந்திருக்கவேண்டுமென்பதுமே யாம்" என்பதாகும்.

சோழர்கட்கு இருதலைநகர்கள் என்று சொல்ல இடந்தந்தது பின்வரும்,

நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புன னாட்டு
மாட மதுரையும் பீடா ருறந்தையுங்
கலிகெழு வஞ்சியும் ஒலிபுனற் புகாரு
மரைசு வீற்றிருந்த உரைசால் சிறப்பின்
மன்னன் மாறன் மகிழ்துணை யாகிய
இன்னிள வேனில் வந்த திவண்

---

* இதுவே யான் கண்டுபேசிய பண்டிதர் பலருடைய கொள்கையாகத் தெரிகிறது.

என்னும் சிலப்பதிகார வேனிற்காதை முதலேழு வரிகளேயாம். வேறு நூல்களில் இவ்வித ஆதாரமிருப்பதாக இவர்களி லொருவரும் காட்டவில்லை. மேற்காட்டிய அடிகளுக்கு ஆசிரியர் அடியார்க்குநல்லார் உரைகூறுமிடத்து "ஈண்டு என்சொல்லியவாறோ எனின் காமனுக்குத் தேர் தென்றலும், புரவி கிள்ளையும், யானை அந்தியும், சேனை மகளிருமாத லால், தேர் தென்னர்காவலும், புரவி கிள்ளிகாவலும், யானை சேரமான் காவலுமாக்கித் தானுந் தன்சேனையும் புகாரில் வீற்றிருந்தானென்பது கருத்து" என்றார். ஆகவே இவர்கட்கு உறந்தையிலும் புகாரிலும் வேறு வேறு அரசர்கள் அரசாண்டனர் என்றுகோடற்கு அவண் ஆதாரமொன்று மில்லை யென்பதும், கிள்ளியின்நகர் உறந்தையேயென்பதும், புகாரைக் குறித்தது காமன்றன்செயலைக்குறித்ததொருபெருமையே யென்பதும் தெளிவுறக் காணலாம். மேலும்,

'திண்பரித் தென்றலந் தேருந் தார்புனை
வண்பரிக் கிள்ளையு மாலை யானையுங்
கண்கடைப் படுகொலைக் காமர் சேனையு
மெண்படப் புகுந்தன னிரதி காந்தனே'

என்ற செய்யுளை எடுத்துக்காட்டியிருப்பதையும் நுணுகி யாராய்ந்து பொருள்கொள்ளவேண்டுகிறேன்.

இனி, புகாரிலும், உறந்தையிலும் வேறுவேறுசோழர் ஆண்டனரா எனக் கடாவெழும்போது, சிலப்பதிகாரம் 28-வது நடுகற்காதை 116—118 வரிகளில்,

"ஆர்புனை தெரியல் ஒன்பது மன்னரை
நேரி வாயி னிலைச்செரு வென்று
நெடுந்தேர்த் தானையோ டிடும்பிற்புறத் திறுத்துக்
கொடும்போர்கடந்த" என்றும்,

27—நீர்ப்படைக்காதை 117–123 வரிகளில்,

"மாடல மறையோன் மன்னவர்க் குரைக்குநின்
மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
வொத்த பண்பின ரொன்பது மன்ன
ரிளவரசு பொறாஅ ரேவல் கேளார்

என ஆசிரியர் அடியார்க்குநல்லார்கூறிய உண்மையை வித்வான் ஸ்ரீமத் ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்கள் சந்திரவமிசத்திற்புகுந்து ஆண்டுவந்துள்ள திங்கட்சோழரினின்றும் பிரித்துக்காட்ட ஞாயிற்றுச் சோழரெனக் கூறினர் என விவரித்து அதற்குற்ற வாதாரங்களுங் காட்டு கின்றனர். ஆகவே ஞாயிற்றுச்சோழன் என்பது சூரியவமிசத்திலே வந்த கீர்த்திவாய்ந்த அப்பொழுதாண்ட மன்னன என்று பொருள்படுவ தல்லது மணக்கிள்ளி ஆகாதது காண்க. இதுவன்றி யான்முன்னர்க் காட்டிய 'சோழன' என்பது 'சோணை*' என்ற சொல்லாயிருக்கவேண்டு மென்றதற்கும் 'சோணையின்றமக்கள் இருவருள்' என்பது ஒருதலை யொத்தலையுங் கவனிக்கவேண்டுகிறேன்.

இதுகாறும் கூறியதுகொண்டு மணக்கிள்ளி என்பது ஆண்பாற் பெயராகாது என்று துணியலாம்.

இனி, இரண்டாவதான உறந்தைச்சோழர், புகார்ச்சோழர் பிரிவு களைப்பற்றி அவர்கள் ஆராய்ந்து கண்ட முடிவாவது :—"மதுரை, வஞ்சிபோன்று சோழர்க்கு ஒரு நகரமில்லாது இருநகர்கள் இருப்பதான் இருநகர்களிலும் அரசர்கள் ஆண்டுவந்திருக்கவேண்டுமென்பதும், பலவர சர் ஒரேவமிசத்தில் ஏககாலத்தில் இருந்தவாராகக் காணப்பட்டுச் சரித் திரவொற்றுமைபெறுவதில் மபக்கங்கொள்ளநேருமாகையால் இருவேறு பிரிவினராய சோழர்கள் ஆண்டுவந்திருக்கவேண்டுமென்பதுமே யாம்" என்பதாகும்.

சோழர்கட்கு இருதலைநகர்கள் என்று சொல்ல இடந்தந்தது பின்வரும்,

நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புன னாட்டு
மாட மதுரையும் பீடா ருறந்தையுங்
கலிகெழு வஞ்சியும் ஒலிபுனற் புகாரு
மரைசு வீற்றிருந்த உரைசால் சிறப்பின்
மன்னன் மாரன் மகிழ்துணை யாகிய
இன்னிள வேனில் வந்த திவண்

---

* இதுவே யான் கண்டுபேசிய பண்டிதர் பலருடைய கொள்கையாகத் தெரிகிறது.

என்னும் சிலப்பதிகார வேனிற்காதை முதலேழு வரிகளேயாம். வேறு நூல்களில் இவ்வித ஆதாரமிருப்பதாக இவர்களி லொருவரும் காட்டவில்லை. மேற்காட்டிய அடிகளுக்கு ஆசிரியர் அடியார்க்குநல்லார் உரைகூறுமிடத்து "ஈண்டு என்சொல்லியவாறோ எனின் காமனுக்குத் தேர் தென்றலும், புரவி கிள்ளையும், யானை அந்தியும், சேனை மகளிருமாதலால், தேர் தென்னர்காவலும், புரவி கிள்ளிகாவலும், யானை சேரமான் காவலுமாக்கித் தானுந் தன்சேனையும் புகாரில் வீற்றிருந்தானென்பது கருத்து" என்றார். ஆகவே இவர்கட்கு உறந்தையிலும் புகாரிலும் வேறு வேறு அரசர்கள் அரசாண்டனர் என்றுகோடற்கு அவண் ஆதாரமொன்று மில்லை யென்பதும், கிள்ளியின்நகர் உறந்தையேயென்பதும், புகாரைக் குறித்தது சாமன்றன்செயலைக்குறித்ததொருபெருமையே யென்பதும் தெளிவுறக் காணலாம். மேலும்,

'திண்பரித் தென்றலந் தேருந் தார்புனை
வண்பரிக் கிள்ளையு மாலை யானையுங்
கண்கடைப் படுகொலைக் காமர் சேனையு
மெண்படப் புகுந்தன விராதி காந்தனே'

என்ற செய்யுளை எடுத்துக்காட்டியிருப்பதையும் நுணுகி யாராய்ந்து பொருள்கொள்ளவேண்டுகிறேன்.

இனி, புகாரிலும், உறந்தையிலும் வேறுவேறுசோழர் ஆண்டனரா எனக் கடாவெழும்போது, சிலப்பதிகாரம் 28-வது நடுகற்காதை 116—118 வரிகளில்,

"ஆர்புனை தெரியல் ஒன்பது மன்னரை
நேரி வாயி னிலைச்செரு வென்று
நெடுந்தேர்த் தானையோ டிடும்பிற்புறத் திறுத்துக்
கொடும்போர்கடந்த" என்றும்,

27—நீர்ப்படைக்காதை 117–123 வரிகளில்,

"மாடல மறையோன் மன்னவர்க் குரைக்குநின்
மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
வொத்த பண்பின ரொன்பது மன்ன
ரிளவரசு பொறாஅ ரேவல் கேளார்

வளநா டழிக்கு மாண்பின ராதலி
னொன்பது குடையு மொருபக லொழித்தவன்
பொன்புனை திகிரி யொருவழிப் படுத்தோய்"

என்றும் விடையிறுக்கும். இதனாலே இளவரசர் ஒன்பதின்மர் இருந்தன ரென்பதும், வளநாடழிக்கும் மாண்பினர் என்பதால் இவர்கள் கலாம் விளைத்துவந்தனரென்பதும், வளவன் கிள்ளியொடுபொருந்தா வென்ப தால் அவனே இவர்கட்குத் தலைவனாய் விளங்கியவனென்பதும் பெறு கின்றுமாயினும் இவவொன்பதின்மரும் தலைவனை ஒத்தவர்கள் என்பதி லும் ஐயமில்லை; அவன் ஏவல்வழிநின்றவர்கள் என்பதும் மறுக்கமுடி யாதது. மேலும், முதலாவது உரைபெறுகட்டுரையில் "அதுகேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோழியகத்து................" என்ற காணப்படுவ தால் அக்காலத்தேயே புகார் அழிந்துபட்டது என்று காண்கிறது. கோழியகத்திருந்தவனும் வளவன்கிள்ளியேயாம்.

இனி, பண்டித ஸ்ரீமத் மு. இராகவையங்காரவர்கள் மரபு அட்ட வணையில், பின்வருமாறு காட்டுகின்றனர்.

உறையூர். — புகார்.
மணக்கிள்ளி. — கரிகாலன்.
| |
காரியாற்றுத் துஞ்சியநெடுங்கிள்ளி — கிள்ளிவளவன்
| |
இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி. — சேட்சென்னி நலங்கிள்ளி.

I. இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியைப்பற்றி ஆராய்வோ மாயின், புறநானூறு முதற்பதிப்பிலே மகாமகோபாத்யாய: ஐயரவர்கள் பாடப்பட்டோர்வரலாற்றில், சோழன் இராசசூயம்வேட்ட பெருநற் கிள்ளியுட னிருந்தார் திருக்குறள் அரங்கேற்றுவித்த பாண்டியன் உக்கிரப்பெருவழுதி என்றும், அவனைப்பாடிய புலவர்கள் ஔவையார், ஐயூர்மூலங்கிழார் முதலியோராவர் என்றும் குறித்துள்ளார்கள். அவர் கள்கொண்டகருத்து நிறையுடையதேயன்றிப் பிறிதன்றும்.

II. மேற்கூறிப்போந்த புரவலர்களைப் பாடிய புலவர்கள் யாவரென ஆராய்வோமாயின், புறநானூற்றிற் பின்வருமாறுகாணப்படுகிறது:—

1. நெடுங்கிள்ளியைப்பாடியவர் கோவூர்கிழாரொருவரே;

2. சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியைப் பாடியவர் பாண்டரங்கண்ணனார், ஔவையார், உலோச்சனார்.

3. கிள்ளிவளவனைப் பாடியவர்கள் ஆலத்தூர்கிழார், வெள்ளைக்குடிநாகனார், மாறோக்கத்து நப்பசலையார், ஆவூர் மூலங்கிழார், கோவூர்கிழார், இடைக்காடனார், ஆடுதுறை மாசாத்தனார், ஐயூர்முடவனார், நல்லிறையனார், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்.

4. நலங்கிள்ளியைப்பாடியவர்கள் உறையூர் முதுகண்ணன் சாத்தனார், கோவூர்கிழார், ஆலத்தூர்கிழார்.

இராசசூயம்வேட்டபெருநற்கிள்ளியைப் பாடிய பாண்டரங்கண்ணனாரும், உலோச்சனாரும் வேறு ஒருவரையும் பாடாதது கொண்டும், சேரமான் மாவெண்கோ, பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதியோடு உடனிருந்தமையானும் இவன் நலங்கிள்ளி கிள்ளிவளவனுக்குப் பின்னிருத்தல் ஏலாதாம்.

III. கரிகாற் பெருவளத்தானுடன்பொருத சேரன் பெருஞ்சேரலாதனுவான்.* இவனேசெங்குட்டுவன்றந்தையெனச்சோன்செங்குட்டுவனாசிரியர் காட்டினார்—(பக் 10—12). இந்த ஆதனைப் பரணரும் கழாத்தலையாரும் பாடியிருக்கின்றனர். இக்கழாத்தலையார் சோழன் வேற்பஃறடக்கைப்பெருநற்கிள்ளியைப் பாடியுள்ளார். இவனுக்குப் பெருவிறற்கிள்ளி யென்றும் ஒருபெயருண்டு. இவனைப்பற்றிச் சோன்செங்குட்டுவனாசிரியர், "செங்குட்டுவன்தந்தையாகிய நெடுஞ்சேரலாதன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி என்னுஞ் சோழனுடன் பெரும்போர் புரிந்தபோது அவ்விருவருமே போர்க்களத்தில் ஒருங்கிறந்தனர் என்பது அவர்கள் இறந்துகிடந்தநிலையை நேரிற் கண்டு கழாத்தலையாரும் பரணரும் உருகிப் பாடியபாடல்களால், தெரியவருகின்றது" † என்பர். இந்த ஆதன் ஒருமுறை கரிகாலனோடு வெண்ணிற் பரந்தலையிற் பொருது நாணி வடக்கிருந்தானென்பது புறம் 65-ல் தெரிகிறது.

---

* இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் குடவர்கோமான் நெடுஞ்சேரலாதனும் ஒருவரோ, வேறோ என்ற ஐயம் நீக்கப்படவேண்டும்—சோம.

† பக் 21.

இதன்பின்னரே இவன் (ஆதன்) பெருநற்கிள்ளியோடு பொருது களத் தவிந்திருக்கவேண்டுமாகையான் இப்பெருநற்கிள்ளி, நெடுங்கிள்ளி, நலங் கிள்ளிக்குப் பின்னிருத்தலமையாதென்பது வலியுறுவதோடு, இவன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியோ என்பது ஐயத்துக்கிடமாகிறது. ஆயினும், இவனைப்பற்றிச் சேரன் செங்குட்டுவனாசிரியர் "செங்குட்டு வன் அம்மானாகிய நெடுங்கிள்ளி இங்ஙன மிறந்ததும் இவன் மகனை பெருங்கிள்ளி உறையூரிற் பட்டமெய்தினன்; திருக்கோவலூர்ச் சிற்றரச னும் பெருவீரனுமாகிய மலையமான் திருமுடிக்காரி என்பவன் உறை யூர்ச்சோழர்க்குச் சேனாதிபதியாகவிருந்து உதவிபுரிந்துவந்தான்; ஆனால் இவனும் அதிர்ஷ்டவீனத்தால் இடையில் இறந்துவிட்டான். விடவே ஆண்டில் இளையனாப் பட்டமெய்திய பெருநற்கிள்ளியுடன் அவன் ஞாதியரசரெல்லாம் கிளம்பிப் பெருங் கலகம் விளைப்பாராயினர். இக்காலத்தே அவ்விளஞ்சோழன் தனக்குப் பெருந்துணைவனாக விருந்த மலையமானது முள்ளூர்மலையில் ஓடி ஒளிக்கும்படிநேர்ந்தது. இவனை இவ்வாபத்துக்காலத்திற் காத்துவந்தவன் முற்கூறிய மலையமான் மகன் திருக்கண்ணன் என்பான். இங்ஙனம் தன் அம்மான்மகனுக்கு நேர்ந்த ஆபத்தைக் கேட்டதும் செங்குட்டுவன் விரைந்துசென்று அவனுக்குப் பகைவராய்த்தோன்றிய சோழரொன்பதின்மரை உறையூரைபடுத்த நேரிவாயிலில் அழித்துத் தன் மைத்துனச்சோழனைப் பட்டத்தில் நிறு வினான். இச்செய்தி முன்னரும் விளக்கப்பட்டது. * * * இவ்வாறு செங்குட்டுவனால் உதவிபுரிபப்பெற்றவனே பிற்காலத்திற் பெருவீரனாய் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி யெனச் சிறப்பிக்கப்பெற்றவன் எனத் தெரிகின்றது" என்பர். புறநானூற்றை யாராயும்போது, இக்கிள்ளி தேர்வண்மலையன் என்பானைத் துணையாகக்கொண்டு சேரமான் மாந்தரஞ் சேரலிரும்பொறைபொடு பொருது அவனை வென்றான் என்றும், சேர மான் மாவெண்கோவொடும், கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதியொடும் நட்புடையவனாயிருந்தானென்றும் காணப்படுகிறது என்று முன்னரே காட்டியுள்ளேன். மாந்தரஞ்சேரலிரும்பொறையோ கபிலர்* இறந்து பட்டார்; யார் எனது விளங்கில்வெற்றியைக் கூறப்போகின்றார் எனக்

*கபிலர் என்று ஒரு ஆராய்ச்சிப்புத்தகம் வெளியாகியிருப்பதாகக் கேள் விப்பட்டேனெனினும் அதன் ஆசிரியர்கொள்கை இன்னதெனயான் அறியேன். சோம.

கவலைப்பட்டிருக்கின்றனன். கபிலரை இவன் நேரிலறிந்திருந்தாலன்றி இவ்வாறுகூறுவது தகுதியாகாது. ஆகவே இராசசூயம்வேட்டானும் கபிலர்காலத்துக்குச் சற்று முன்னே பின்னே இருந்திருக்கவேண்டுமாதலால், செங்குட்டுவன்காலத்திருந்தானென்றல் பொருந்துவ தெங்ஙனம்?

II. i. நெடுங்கிள்ளியைப்பற்றி யாராய்வோமாயின், அவனைப்பற்றி, "செங்குட்டுவன்தாயுடன்பிறந்த அம்மானும் சோழன்மணக்கிள்ளியின்மகனுமாகிய நெடுங்கிள்ளி உறையூரை யாண்டுவந்தனன். புறம் (44, 45, 47). இவ்வுறையூர்ச்சோழர்க்கும் புகார்ச்சோழர்க்கும் பெரும்பகையுண்டு போர்நிகழ்ந்துவந்ததாகப் புறநானூற்றால் அறியப்படுகின்றது. .... இவருடன் காரியாற்றங்கரையில் நடந்த போரிலே செங்குட்டுவனம்மானாகிய நெடுங்கிள்ளி இறந்தானென்பது, காரியாற்றுத்துஞ்சிய என அவன் விசேடிக்கப்படுதலானும் .... புலப்படுகின்றன" என்பர் சேரன்செங்குட்டுவனாசிரியர்.

இந் நெடுங்கிள்ளியைப்பற்றிப் புறநானூறு பாடப்பட்டோர்வரலாற்றில் "இவன் சோழபரம்பரையைச் சேர்ந்தோன்; ஆவூரும் உறையூரும் இவனுடையவை; சோழன்நலங்கிள்ளி இவற்றை முற்றியிருந்த பொழுது கோட்டைவாயிலை அடைத்துக்கொண்டு உள்ளேயிருந்த இவன் பின்பு கோவூர்கிழாரால் தேற்றப்பட்டான். காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி எனவும் இவனுக்குப் பெயருண்டு. இவனைப்பாடிய புலவர் கோவூர்கிழார் 44, 45, 47" என்று காணப்படுகிறது.

ii. a. புறப்பாட்டுக்களை யாராய்வோமாயின் 44-ல் "அவன் (மாவளத்தான்) ஆவூர் முற்றியிருந்தகாலத்து அடைத்திருந்த நெடுங்கிள்ளியைக் கோவூர்கிழார் பாடியது" என்று காணப்படுகிறது. இப்பாட்டில், புலவர் நெடுங்கிள்ளியைநோக்கி "யானை உருமேறுபோல முழங்கவும், பாலில்லாத குழவி அழவும், மகளிர் பூவில்லாதவறியதலையை முடிப்பவும், நீரில்லாத தொழில்புனைந்த நல்லமனையிடத்துள்ளார் வருந்திக் கூப்பிடும் கூப்பீட்டைக்கேட்கவும் இவற்றிற்கு நாணாது, இவ்விடத்தில் நீ இனிதாக இருத்தல் இன்னாது; அறத்தை யுடையையாயின் இது நினதன்றேவென்றுசொல்லித் திறத்தல் செய்வாயாக; மறத்தை யுடையையாயின் போரால் திறத்தல்செய்வாயாக" என்கின்றார்.

b. 45-வது பாட்டில் 'சோழன்நலங்கிள்ளி உறையூர் முற்றியிருந்தானையும், அடைத்திருந்த நெடுங்கிள்ளியையும் கோவூர்கிழார் பாடியது' என்று காணப்படுகிறது. அதனில் கோவூர்கிழார் "சேரனல்லன்; பாண்டியனல்லன்; நின்னுடன் பொருவானுடைய கண்ணியும் ஆத்தியாற் செறியக்கட்டப்பட்டது; நின்னுடையகண்ணியும் ஆத்தியாற் செறியக்கட்டப்பட்டது; ஆதலால் நும்முள் ஒருவீர் தோற்பினும் தோற்பது நுங்குடியன்றோ? இருவீரும்வெல்லுதல் இயல்புமன்று; ஆதலால் நுங்குடிக்குத் தக்கதொன்று அன்று நுமது செய்கை"என்கின்றார்.

c. புறம் 47-ல் நலங்கிள்ளியுழைநின்று உறையூர்புகுந்த புலவன் இளந்தத்தனை நெடுங்கிள்ளி இவன் ஒற்றுவந்தானென்று ஐயுற்றுக் கொல்லப்போகுங்கால், கோவூர்கிழார் அந்நெடுங்கிள்ளியை நோக்கி இவர் "வாழ்க்கை பிறர்க்குச்செய்யும் கொடுமையறிந்ததோவெனின், இல்லை; கூறுபடக் கல்விமுகத்தால் தம்மொடுமலைந்தோர்நாணத் தமது கல்வியான்வென்று தலையெடுத்து நடப்பவர்" என்றும், "ஓங்குபுகழ் மண்ணாள்செல்வமெய்திய-நும்மோரன்ன செம்மலுமுடைத்தே"என்றுங் கூறி மீட்டார். உரைகாரர் இச்செய்யுளின் கருத்தாகப் "பரிசில் வாழ்க்கை நண்ணார்நாண இனிதொழுகி னல்லது, நும்மோரன்ன செம்மலுமுடைத்து: ஆதலால், பிறர்க்குத் தீதறிந்தன்றோ? இன்றெனக்கூட்டுக" என்று கூறுதலான் நெடுங்கிள்ளி பிழைபட்டான் என்று திட்டமாகக் கூறுதற் கிடமிருக்கிறது.

d. சோழன்நலங்கிள்ளி புறம் 75-ல் "தங்குடியின் முதியோரை முதியோரைக் கூற்றம் கொண்டுபோயிற்றாக; விதிதரப்பட்டுத் தம்பால் வந்த பழையவெற்றியாலுண்டாகிய அரசுரிமையைப் பெற்றோமாதல் இத்தலைமையைப்பெற்றோமெனக்கொண்டு தங்குடிமக்களை இறைவேண்டியிரக்கும் மிகுதியில்லாத ஆண்மையையுடைய உள்ளஞ் சிறியோன் பெறின் அத்தாயம், அவனுக்குப் பரிக்கவொண்ணாதாம்படி கனத்தது மிகவும், சீரியோன் பெறுவானாயின் வெளியகிடேச்சினது கோடைக்கணுலர்ந்த சுள்ளியைப்போலப் பெரிதும் நொய்து" என்பர். கிடேச்சு என்பது நெட்டி.

உ. புறம் 73 ல், "மெல்ல வந்துஎன் நல்லடி பொருந்தி
'ஈ' என இரக்குவ ராயின், சீருடை
முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம்;
இன்னுயி ராயினும் கொடுக்குவன் இந்நிலத்து"

அமைச்சர், படைத்தலைவர் முதலாகிய வலியையுடையோரது வலியைப் பாதுகாவாது என்னுள்ளத்தையிகழ்ந்த அறிவில்லாதோன் யாவர்க்கும் விளங்கத் துயில்கின்றபுலியை இடறிய குருடனபோலப் பிழைத்துப் போதலோ அரிது; மூங்கிலைத் தின்னும் வலியையுடைய யானையினது காலின்கணகப்பட்ட வலிய திணிய மூங்கிலது நீண்ட முளையையொப்ப மேற்சென்று அவ்விடத்து வருந்தும்படி பொருதிலேனாயின், கூடிய தீதில்லாத நெஞ்சத்தாற் காதல்கொள்ளாத பலவகைப்பட்ட கரிய கூந் தலையுடைய பொதுப்பெண்டிரது பொருந்தாதபுணர்ச்சியிடை என்மாலை துவள்வதாக; என்கின்றான் சோழன் நலங்கிள்ளி.

இதுகாறும் கூறியதினின்றும், நலங்கிள்ளி, பழைமையான தங்குடி யிலே இரண்டு தலைமுறையினரை முதியோரை, முதியோரை)க் கூற்றம் கொண்டுபோகத் தாம் பெற்ற அரசுரிமையாகுமென்றும் (75), இவன் கீழ் இளவரசனாகவோ, ராசப்பிரதிநிதியாகவோ சோழநாட்டில் ஒரு பகுதியை நெடுங்கிள்ளி யாண்டுவந்தானென்பது கோவூர்கிழார் "இது நினதன்றோவென்று சொல்லித் திறத்தல் செய்வாயாக (புறம் 44) என்பதுகொண்டு பெறுதலாலும் அவரே இளந்தத்தனை மீட்குமுகத் தானே 'நின்றோரன்ன செம்மலு முடைத்து' (47) என இழிவுசிறப் பும்மையாற் கூறுதலாலும், நலங்கிள்ளியே தன்னடிபணிந்து எனக்குக் கொடு என்று இரப்பாராயின் உயிரையும் கொடுக்க மறுக்கேன் (73) என்பதனால் நெடுங்கிள்ளியைச் சுட்டுதலாலும், பிறிதொருபொருள் கூறு வான்போன்று தான் குடிகளை ஒறுக்காதவனென்றும், தாயம் சிறி யோன் பெறின், குடிமக்களைக் கொள்ளுங்கடமையன்றி மிகத்தரவேண்டு

மென்று இரப்பன் என்றும் சுட்டுதலானும் (75), நெடுங்கிள்ளி தனியா சுடையவனல்லனென்றும் கொள்ளவேண்டியிருக்கிறது.

மேலும், இந் நலங்கிள்ளியைக் கோவூர்கிழார் புறம் 45ல் "உறந்தை யோனே" என்றும், 69-ல் 'பிறங்குநிலைமாடத் துறந்தையோனே' என்றும், மாறோக்கத்து நப்பசலையார் 39 ல் 'உறந்தையவையத்து அறநின்று நிலையிற்றாகலின்' என்றும் கூறுதலான் இந்நலங்கிள்ளி உறந்தையையே தலைநகராகக் கொண்டு அரசாண்டனன் என்பது வலியுறும். இவனுக்குப் பகைவர்க ளில்லை என்பதும் பெறப்படுகிறது. (இதன் விரிவெல்லாம் கிள்ளிவளவன் என்னும் உரைநடையிற் காண்க)ஈண்டுவிரிக்கிற் பல்கு மென் றஞ்சி விடுத்தாம்.

III. கரிகாலன் ஆசிரியர் கூற்றுக்கும் (பக்-24) அவரால் பின்பற்றப்பட்ட சேது ஸம்ஸ்தானவித்வான் உ. வே. ரா. இராகவையங்காரவர்கள் கொள்கைக்கும் முற்றும் முரணுமென்பதையும் கவனித்து இவ்வாறு பல்வகையினு முண்டாகும் ஐயங்களை நீக்குதல் மறுப்புரைகாரர் கடனாகு மென்பேன்.

இலக்கண விளக்கபரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

உ

முதற்கண்டராதித்த சோழதேவர்.

இவ்வரசர்பெருமான் சோணாட்டில், தஞ்சையில்வீற்றிருந்து அரசு புரிந்த சோழமன்னர்களுள் ஒருவர்; முதற்பராந்தக சோழதேவரது இரண்டாவது புதல்வர். இவரது தமையனாராகிய இராஜாதித்தன் என்பார் தக்கோலத்தில், கி. பி. 949-ல் இரட்ட அரசனாகிய கன்னர தேவனோடு புரிந்த பெரும்போரில் இறந்தமையின், பராந்தகசோழதேவருக்குப்பின்னர் இவர் சோழமண்டலத்தின் அரசாக அரியணையேறினர். அப்போரின்பயனாக, பகைவனாகிய கன்னரதேவன் சோழமண்டலத்தின் வடக்கிற் சிலபகுதிகளைக் கவர்ந்துகொண்டமையின் எஞ்சியவற்றையே கண்டராதித்தர் ஆண்டுவந்தனர்.

சோழமன்னர்கள் ஒருவர்பின் ஒருவராகத் தரித்துக்கொண்டுவந்த இராஜகேசரி பரகேசரி என்றபட்டங்களுள் இவர் இராஜகேசரியென்னும் பட்டம் புனைந்தவர். கண்டராதித்தச் சதுர்வேதிமங்கலம் என்ற ஒரு நகரைக் காவிரியின் வடகரையில் இவர் தம்பெயரால் அமைத்தாரென்று லேய்டன்நகரச்செப்பேடுகள் கூறுகின்றன. அதுவே, இப்போது திருச்சிராப்பள்ளிஜில்லாவிலுள்ள கண்டராதித்தம்* என்ற ஊர்போலும்.

இவர் தமிழ்மொழியிற் சிறந்தபுலமையும் சிவபெருமானிடத்துப் பேரன்பும் வாய்ந்தவரென்பது இவர் பாடியுள்ள திருவிசைப்பாவினால் தெரிகிறது. திருவிசைப்பாவில் இவர் பாடிய பதிகங்கள் பல இருத்தல்வேண்டும். ஆனால், தற்காலத்திலுள்ளது 'மின்னாருருவமேல் விளங்க' என்னும் தொடக்கத்துக் கோயிற்பதிகம் ஒன்றே. அப்பதிகத்தின் எட்டாவது பாடலில், 'வெங்கோல்வேந்தன்றென்னனாடுமீழமுங் கொண்டதிறற்—செங்கோற்சோழன்கோழிவேந்தன்செம்பியன்' என்று தம் தந்தையாராகிய முதற்பராந்தகசோழதேவரைக் குறித்திருப்பதோடு அவர் தில்லையம்பலத்திற்குப் பொன்வேய்ந்ததையும் கூறியுள்ளனர்.

* S. I. I. Vol. II No. 6.

அன்றியும், பத்தாம்பாடலில், "காரார்சோலைக்கோழிவேந்தன்றஞ்சையர்கோன்கலந்த,—வாராவின்சொறகண்டராதித்தன்" என்று தம்மையே இவர் குறித்திருப்பது அறியத்தக்கதொன்றும்.

இஃதிங்ஙனமாக; சோழவமிசசரித்திரம் எழுதிய அறிஞர் து. அ. கோபிநாதராயர் அவர்கள் திருவிசைப்பாப்பாடியவர் இரண்டாங் கண்டராதித்தரென்று அந்நூலில் வரைந்துள்ளனர்; அதற்கு அவர்கூறுங் காரணமாவது:— கண்டராதித்தர் முதல்இராஜராஜ சோழதேவர் தஞ்சையில் எடுப்பித்த இராசராசேச்சுரத்தைத் தம் திருவிசைப்பாவில் பாடியிருக்கின்றனர்; முதல்இராஜராஜசோழதேவர், முதற்கண்டராதித்தரது தம்பியாகிய அரிஞ்சயன் என்பாரது பெயரர்; சுந்தரசோழரென்று அழைக்கப்பெறும் இரண்டாம்பராந்தகசோழரது புதல்வர்; ஆதலால், தஞ்சை இராசராசேச்சுரத்தைத் திருவிசைப்பாவிற் பாடியவர் முதற்கண்டராதித்தரெனக்கொள்ளின், அவர், தம் தம்பியினபெயரரது ஆட்சிக்காலத்தும் இருந்தவராதல்வேண்டும்; ஆனால், முதற்கண்டராதித்தர் இறந்தபின்னரே அவரது தம்பியாகிய அரிஞ்சயனென்பார் செங்கோல் கைக்கொண்டனரென்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன; எனவே, திருவிசைப்பாப் பாடியவர் முதற்கண்டராதித்தர் ஆகார்—என்பது. திருவிசைப்பாவிலுள்ள பதிகங்களுள்: கண்டராதித்தர் இயற்றியது ஒன்றேயாகும். அப்பதிகமும் கோயிலெனப்படுந் திருச்சிற்றம்பலத்தைப்புகழ்வது. ராயர் அவர்கள் கூறியவாறு கண்டராதித்தர் இராசராசேச்சுரத்தைப்பாடியபதிகம் திருவிசைப்பாவிற் காணப்படவில்லை. ஆனால், திருவிசைப்பாவிலுள்ள இராசராசேச்சுரப்பதிகம் கருவூர்த்தேவர் பாடியதாகும். கங்கைகொண்டசோழீச்சுரத்தைப் பாடியவரும் இக்கருவூர்த்தேவரேயாவர் ஆகவே, கருவூர்த்தேவரியற்றிய இராசராசேச்சுரப்பதிகத்தைக் கண்டராதித்தர் இயற்றினரெனப் பிழையாகக்கொண்டு, அதனால், திருவிசைப்பாப்பாடியவர் இரண்டாம் கண்டராதித்தர் என்று ராயர் அவர்கள் எழுதியிருப்பது தவறுடைத்தென்க. எனவே, முதற்கண்டராதித்தரே திருவிசைப்பாப் பாடியவரென்பது திண்ணம்.

இனி, கண்டராதித்தரது ஆட்சிக்காலம் மிகச்சுருங்கியதொன்றேயாம். இவர், தம்கீழ்வாழுங் குடிகளிடத்தில் அன்பும் இரக்கமுமுடையவராய்ப் பல நற்கருமங்களைச் செய்துள்ளனர். இவர்காலத்திற் போர்

முதலியன நிகழவில்லையாதலின், குடிகள் எல்லோரும் இன்புற்று வாழ்ந்துவந்தனர். ஆதலால், அன்னோர் தம் அரசர்பாற் பேரன்புடைய ராய், அவரைக் கடவுளின் அவதாரமென்றே கருதுவாராயினர். இவ ருக்கு வீரநாரணியார், செம்பியன்மாதேவியார் என்ற இருமனைவியர் இருந்துள்ளனரென்று தெரிகிறது. அவ்விருவருள் முன்னவர் இவ ரது வாழ்க்கையின் முற்பகுதியிலிருந்தவர். அவ்வரசியார் பலகோயில் கள் கட்டுவித்துப் புகழுற்றனரென்று கி. பி. 931 ல் வெட்டப்பெற்ற முதற்பராந்தகசோழதேவரது கல்வெட்டுக் கூறுகின்றது. இவரது வாழ்க்கையிற் பிற்பகுதியிற், பட்டத்தரசியாக விளங்கியவர் செம்பியன் மாதேவியார்* எனப்படுவர். அரசரது இரண்டாம்மனைவியாகிய அவ் வம்மையார் மழநாட்டரசரது புதல்வியென்று கல்வெட்டுக்கள் அறிவிக் கின்றன. நமது கண்டராதித்தருக்கும் செம்பியன்மாதேவியாருக்கும் மதுராந்தகன் என்ற ஒரு புதல்வர் பிறந்தனர். அவரை உத்தமசோழ ரென்று அழைப்பது வழக்கம். புதல்வர் பிறந்தவுடன் அரசர் வானுல கஞ்சென்றாரென்று லேய்டன் செப்பேடுகள் கூறுகின்றமையின் இவர் செம்பியன்மாதேவியாருடன் நெடுங்காலம் வாழ்ந்திருக்கவில்லையென்று தெரிகிறது. ஆனால் அவ்வரசியார்மாத்திரம் தம் நாயகர் இறந்தபின் னர் நீண்டகாலம் உயிருடனிருந்துள்ளனர். முதல்இராஜராஜ சோழ தேவரது ஆட்சியின் 16-ஆம் ஆண்டாகிய கி. பி. 1001 வரை அவர் இருந்தனரென்பது கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. எனவே, தம் நாயகர் இறந்தபின்னர் சற்றேறக்குறைய நாற்பத்தைந்து வருடங் கள் அவர் உயிருடனிருந்திருக்கின்றனர். அவர், அரசரது முதன் மனைவியாரைப்போல் தாமும் பல கோயில்கள் எடுப்பித்து அவற்றிற்கு நிலங்கள் அளித்தனரென்று பலகல்வெட்டுக்கள் புகழ்ந்துரைக்கின்றன.†

---

* செம்பியன்மாதேவியாருக்கு உடையபிராட்டியார் என்ற பெயரும் உண்டு. (See Ep. Rep. 1910. pp. 87).

† S. I. I: Vol. III No. 151 A. Ep. Rep. 1910 pp. 87.

நம் கண்டராதித்தர் கி. பி. 955-ல் இறந்தபோது இவரது புதல்வர் மதுராந்தகசோழர் என்பார் முடிசூடிக்கொண்டு அரசுபுரிதற்கு ஏற்ற பருவத்தினராயில்லை. ஆதலால் இவரது தம்பியாகிய அரிஞ்சயனென்பவர் இவருக்குப்பின்னர் ஆட்சிபுரியத்தொடங்கினர். அரிஞ்சயனும் அவரது புதல்வர் சுந்தரசோழரும் அரசாண்டபின்னர், மதுராந்தகசோழர் கி. பி. 969-ல் முடிசூடிக்கொண்டு 16-வருடகாலம் ஆட்சிபுரிந்து கி. பி. 985-ல் விண்ணுலகெய்தினர் என்ப.

மதுராந்தகசோழர் அவரது தாய்தந்தையராகிய செம்பியன்மாதேவியார், முதற்கண்டராதித்தர் என்ற மூவரது படிமங்களும் தஞ்சைஜில்லாவிலுள்ள கோனேரிராஜபுரம் சிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

T. V. சதாசிவபண்டாரத்தார்,
தலைமைத்தமிழ்ப்பண்டிதர்,
வாணாதுறை ஹைஸ்கூல், கும்பகோணம்.

ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1923-ஹு மார்ச்சுமீ 3உ நடத்திய ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறிப் பரிசும், யோக்கியதாபத்திரமும் பெறும் மாணாக்கர்களின் விவரம்.

பீ. ஏ. பரீக்ஷை.

2-வது வகுப்பு.

தொடர் எண்.	ரிஜிஸ்டர் எண்.	
1.	1.	E. S. வரதராஜன், பிஷப் ஹீபர்காலேஜ், திருச்சிராப்பள்ளி.
2.	2.	M. கோவிந்தராஜன், ஷை ஷை

எப். ஏ. பரீக்ஷை.

1-வது வகுப்பு.

1. 26. J. S. பொன்னையா, பிஷப் ஹீபர்காலேஜ், திருச்சிராப்பள்ளி
(முதற்பரிசு நபர் 40 பெறத்தக்க தங்கப்பதக்கம்)

2-வது வகுப்பு.

1. 16. G. A. இராமநாதன், நாஷனல்காலேஜ், திருச்சிராப்பள்ளி.
2. 70. G. கல்யாணம், ஸ்ரீமீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்.
3. 24. V. S. K. துரைசாமி, பிஷப் ஹீபர்காலேஜ், திருச்சிராப்பள்ளி.
4. 37. A. செபாஸ்டியன், ஸெயின்ட் ஜோசப் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

5. 75. P. V. துரைராகவன், ஸ்ரீமீனாக்ஷிகாலேஜ், சிதம்பரம்.

6. 14. P. ஜோதிமுத்து, அமெரிக்கன் காலேஜ், மதுரை.

7. 67. R. கோபாலஸ்வாமி, பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.

8. 9. S. சேதுராமன், அமெரிக்கன் காலேஜ், மதுரை.

9. 51. J. ஜானகி (பெண்), H. H. The Maharajah's College, for Women, திருவனந்தபுரம்.

10. 61. P. நடராஜன், மஹாராஜாஸ் காலேஜ், புதுக்கோட்டை.

11. 21. ஞானசெல்வம், தம்புசாமி (பெண்), பிஷப் ஹீபர் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

12. 74. K. M. நடேசன், ஸ்ரீமீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்,

13. 71. S. ராதாகிருஷ்ணன், ௸ ௸

14. 50. S. கனகாபாய், (பெண்) H. H. The Maharajah's College for Women, திருவனந்தபுரம்.

15. 18. E. நாகஸ்வாமி, நாஷனல் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

16. 25. L. G. சுந்தரராஜுலு. பிஷப் ஹீபர் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

17. 36. ஜி. ஆறுமுகம், ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சிராப்பள்ளி.

மெற்றிக்குலேஷன் பரீக்ஷை.

1-வது வகுப்பு.

1. 198. இளங்காடு, கோ. முருகையன், ஹைஸ்கூல், திருக்காட்டுப் பள்ளி.

[முதற்பரிசு ரூபா 30 (வெள்ளிப்பதக்கமும் மீத ரூபாவும்)]

2. 191. T. R. சிவசுப்பிரமணியன், ஸெண்ட் பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

(இரண்டாவது பரிசு ரூபா 25)

3. 154. P. முத்தையா, St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.

(மூன்றாவது பரிசு ரூபா 20)

4. 176. A. பொன்னம்மாள் (பெண்), சர்க்கார் ஸெக்கன்டரி பெண் பாடசாலை, திருப்பாப்புலியூர்.
(நான்காவது பரிசு ரூபா 15)

5. 106. K. S. ஸ்ரீநிவாஸன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.
(ஐந்தாவது பரிசு ரூபா 12)

6. 146. K. பக்ஷிராஜன், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.

7. 319. M. ஷண்முகசுந்தரம், போர்டு ஹைஸ்கூல், பட்டுக்கோட்டை.

8. 189. T. R. புருஷோத்தமன், ஸென்ட் பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

9. 316. T. S. சுப்பிரமணியன், போர்டு ஹைஸ்கூல், திருத்தருப்பூண்டி.

10. 338. K. ரகோத்தமராவ், போர்டு ஹைஸ்கூல், பண்ருட்டி.

11. 136. V. P. அனந்தராமன், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.

12. 164. M. துரைசாமி, ஸென்ட் மிக்கேல் ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.

13. 196. S. கோதண்டபாணி, ஸென்ட்பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

14. 107. P. S. சுப்பிரமணியன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.

15. 342. V. T. நாததேசிகன், போர்டு ஹைஸ்கூல், பண்ருட்டி.

16. 315. M. சுவாமிநாதன், போர்டு ஹைஸ்கூல், திருத்தருப்பூண்டி.

2-வது வகுப்பு.

1. 166. P. I. சுப்பிரமணியன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.

2. 207. D. L. மேரியான் (Mary Ann Lazarus), A. A. M. G. High School, ராணிப்பேட்டை.

3. 183. S. குப்புசாமி, கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

4. 147. A. V. ஆவுடைநாயகம், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.

5. 155. J. பீற்றர் பிஞ்ஞேயிர, St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.

6. 170. N. T. திருவேங்கடாச்சாரி, மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.

7. 186. N. ரங்கநாதன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
8. 289. C. ஆறுமுகம், ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.
9. 299. R. லெக்ஷ்மீநாராயணன், ஹைஸ்கூல், பத்தமடை.
10. 115. A. V. முத்துசாமி, ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.
11. 293. S. கோதண்டராமன், இந்து நாடார் உயர்தரக்கலாசாலை, சாத்தூர்.
12. 142. S. சிவசுப்பிரமணியன், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.
13. 194. P. S. இராஜகோபாலன், ஸெண்ட் பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
14. 250. V. ஸ்ரீநிவாஸவரதன், போர்டு ஹைஸ்கூல், Cheyar, (திருவத்திபுரம்) N. A. Dt.
15. 321. A. வேலு, போர்டு ஹைஸ்கூல், பட்டுக்கோட்டை.
16. 335. K. S. ஸ்ரீநிவாஸன், முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம்.
17. 195. M. A. நடராஜன், ஸெண்ட் பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
18. 161. T. S. சுந்தரம், கவர்ன்மெண்ட் காலேஜ், கோயம்புத்தூர்.
19. 348. A. ராஜம், ஹைஸ்கூல், கோபாலசமுத்திரம்.
20. 216. C. ஏகாம்பரையர், பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சீவரம்.
21. 251. A. வேதபுரிநாயகன், போர்டுஹைஸ்கூல், Chêyar (திருவத்திபுரம்), N. A. Dt.
22. 148. D. முத்தையா, C. M. S. காலேஜ், திருநெல்வேலி.
23. 278. S. கிருஷ்ணமூர்த்தி, டேனிஷ் மிஷன் ஹைஸ்கூல் திருவண்ணாமலை.
24. 130. T. D. சுப்பிரமணியம், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.
25. 245. V. அருணாசலய்யர், பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சீவரம்.
26. 318. K. S. இராமசாமி, போர்டுஹைஸ்கூல், பட்டுக்கோட்டை.
27. 341. R. சின்னசாமிநாயுடு, போர்டு ஹைஸ்கூல், பண்ருட்டி.
28. 287. V. S. ஸ்ரீநிவாஸன், ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.
29. 288. S. S. சுப்பிரமணியன், ஷை ஷை
30. 137. K. N. அம்பலவாணன், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.

31. 188. G. ரெங்கநாதராவ், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல் தஞ்சாவூர்.
32. 131. N. S. ராமஸ்வாமி, ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
33. 129. S. A. சுந்தரராஜன், ஷை ஷை
34. 184. D. மாரிமுத்து, கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
35. 197. G. கிருஷ்ணசாமி, ஸெண்ட் பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
36. 208. A. S. நடேசமுதலி, முனிசிபல் ஹைஸ்கூல், குடியாத்தம், N. A. Dt.
37. 227. S. பொன்னுக்கண், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.
38. 302. R. மகாலிங்கம், கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல், திருவாரூர்.
39. 212. S. V. மீனாக்ஷிசுந்தரம், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.
40. 215. V. K. சின்னப்பன், ஷை ஷை
41. 325. U. G. ஸ்ரீநிவாஸன், முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம்.
42. 356. K. முத்துக்குமாரஸ்வாமி, பச்சையப்பா ஹைஸ்கூல், சிதம்பரம்.
43. 209. T. கிருஷ்ணசாமி, C. R. C. ஹைஸ்கூல், புரசபாக்கம், சென்னை.
44. 267. N. முருகேசமுதலியார், டேனிஷ் மிஷன் ஹைஸ்கூல், திருவண்ணாமலை.
45. 168. K. லக்ஷ்மிநாராயணன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.
46. 242. R. ஸ்ரீநிவாஸன், நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.
47. 254. R. பெரியசாமி, விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.
48. 255. K. நடராஜன், ஷை ஷை
49. 313. P. வெங்கட்டராமன், போர்டுஹைஸ்கூல், திருத்தருப்பூண்டி
50. 368. A. திருஞானசம்பந்தன், ராமசாமி செட்டியார் டவுன் ஹைஸ்கூல், சிதம்பரம்.
51. 252. V. ராகவாசாரி, போர்டு ஹைஸ்கூல், Cheyar (திருவத்திபுரம்) N. A. Dt.
52. 374. V. சுந்தரேசன், ராமசாமிசெட்டியார் டவுன் ஹைஸ்கூல், சிதம்பரம்
53. 112. S. V. கிருஷ்ணன், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.
54. 132. M. N. அருணாசலம், ஷை ஷை

55. 163. C. N. ராமகிருஷ்ணன், ஸெண்ட் மிக்கேல் ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.
56. 140. R. சுப்பிரமணியன், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.
57. 211. R. ஸ்ரீநிவாஸன், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.
58. 372. M. D. ரங்கராமாநுஜம், ராமசாமிசெட்டியார் டவுன் ஹைஸ்கூல, சிதம்பரம்.
59. 135. C. சுப்பையா, ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.
60. 158. K. வெங்கிடகிருஷ்ணன், St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.
61. 165. E. V. சிங்காரவேலு, மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.
62. 139. T. சுடர்வேலானந்தம், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.
63. 292. T. ஆசீர்வாதம், இந்து நாடார் உயர்தரக்கலாசாலை, சாத்தூர்.
64. 103. K. தொண்டிமுத்து, ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.
65. 151. A. வள்ளிநாயகம், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.
66. 171. J. கிருஷ்ணசாமி, ஸெண்ட் ஜோசப் ஹைஸ்கூல், கூடலூர்.
67. 206. S. N. முனிரத்தினம், ஸ்ரீமகன்த் ஹைஸ்கூல், வேலூர்.
68. 157. K. G. ஸ்ரீநிவாஸன், St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.
69. 167. S. D. சுப்பிரமணியன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.
70. 180. S. சுப்பிரமணியன், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.
71. 217. A. கலியாணசுந்தரம், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.
72. 104. V. வீரபத்திரன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.
73. 280. சி. சி. குரு, டேனிஷ்மிஷன் ஹைஸ்கூல், திருவண்ணாமலை.
74. 301. R. ராமலிங்கம், கவர்ன்மெண்டு ஹைஸ்கூல், திருவாரூர்.
75. 79. L. N. S. ராமலிங்கம், ஸௌராஷ்டிர ஹைஸ்கூல், மதுரை.
76. 222. S. ராமய்யா, முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.
77. 230. J. நாராயணசாமி, நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.
78. 286. A. ஞானகிரி, ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.
79. 352. C. R. இராமையன், பச்சையப்பா ஹைஸ்கூல், சிதம்பரம்.
80. 367. A. பூவராகாசாரி, ராமசாமி செட்டியார் டவுன் ஹைஸ்கூல், சிதம்பரம்.

81. 82. P. சதாசிவன், ஸௌராஷ்டிரா ஹைஸ்கூல், மதுரை.
82. 169. E. ஆணிமுத்து, மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.
83. 200. (a) S. சௌந்தரராஜன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
84. 311. K. கோவிந்தசாமி, கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல், திருவாரூர்.
85. 181. P. தியாகராஜன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்
86. 294. M. குருசாமி இந்து நாடார் உயர்தரக்கலாசாலை, சாத்தூர்.
87. 303. S. வேதம், கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல், திருவாரூர்.
88. 340. C. P. துரைசாமி, போர்டு ஹைஸ்கூல், பண்ருட்டி.
89. 95. M. ரெங்கசாமி, யூனியன் கிறிஸ்டியன்ஹைஸ்கூல், மதுரை.
90. 172. A. ஜெயராமலு, ஸெண்ட் ஜோசப் ஹைஸ்கூல், கூடலூர்.
91. 371. P. கோவிந்தராஜன், ராமசாமி செட்டியார் டவுன் ஹைஸ்கூல், சிதம்பரம்.
92. 128. D. ஆறுமுகம், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.
93. 159. K. S. மிருத்தியுஞ்சயன், கவர்ன்மெண்ட் காலேஜ், கோயம்புத்தூர்.
94. 185. T. S. ஹனுமந்தராவ், கலியாணசுந்தரம் ஹை ஸ்கூல், தஞ்சாவூர்.
95. 249. T. C. வரதராமாநுஜன், போர்டுஹைஸ்கூல், Cheyar (திருவத்திபுரம்) N. A. Dt.
96. 339. G. லக்ஷ்மண அய்யர், போர்டு ஹைஸ்கூல், பண்ருட்டி.
97. 224. N. சுவாமிநாதன், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.
98. 343. A. நடராஜன். ஸ்ரீ பூமீஸ்வரஸ்வாமி ஹைஸ்கூல், ராமச்சந்திரபுரம்.
99. 78. N. ஸ்ரீநிவாஸன். ஸௌராஷ்டிர ஹைஸ்கூல், மதுரை.
100. 240. V. முத்துச்சிதம்பரம், நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.
101. 256. T. A. நாகராஜராவ், விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.
102. 291. K. மாரிசாமி, ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.
103. 366. V. S. லக்ஷ்மணசாரி, ராமசாமிசெட்டியார் டவுன் ஹைஸ்கூல், சிதம்பரம்.
104. 336. K. S. ராமையா, முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம்.
105. 354. N. வெங்கிட்டராமன், பச்சையப்பா ஹைஸ்கூல், சிதம்பரம்.
106. 349. S. தெக்ஷிணாமூர்த்தி, ஷை ஷை

மதுரை,
18-7-1923.

B. இராஜராஜேஸ்வரஸேதுபதி,
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை.

உ

தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் துந்துபிஹூ பங்குனிமீ 20, 21, 22 (1923-ஹூ ஏப்ரல்மீ 2, 3, 4)-ஆம் தேதிகளில் நடத்திய தனித்தமிழ்ப் பரீக்ஷைகளிற் றேறிப் பரிசுப், யோக்கியதா பத்திரமும் பெறும் மாணாக்கர்களின் விவரம்.

பண்டிதபரீக்ஷை.

2-வது வகுப்பு.

தொடர்க்கு நெ.	ரிஜிஸ்டர் நெ.	
1.	2.	N. பத்மாசனி அம்மாள், c/o K. தணிகாசலம், பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.

பாலபண்டிதபரீக்ஷை.

1-வது வகுப்பு.

1. 14. D. மாசில்லாமணி, புதுப்பேட்டைத்தெரு, பாளையங்கோட்டை.

(முதற்பரிசு நபா 70 பெறத்தக்க தங்கப்பதக்கம்).

2-வது வகுப்பு.

1. 3. க. பழநிக்குமாரு, மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

2. 10. மு. நல்லசுவாமி நாடார், பரங்குன்றுப்புரம், வீரகேரளம்புதூர் போஸ்டு, தென்காசித் தாலூகா.

பிரவேசபரீக்ஷை.

2-வது வகுப்பு.

1. 15. இ. கோவிந்தசாமி, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

2. 40. R துரைசாமி ஐயர், தர்மபாடசாலை, திருப்பாதிரிப்புலியூர், தென்னாற்காடு.

3. 49. K. S. பழநிவேற்பிள்ளை, ஆசிரியர், Board H. B. School, களம்பூர் போஸ்டு N. A. District.

மதுரை, 18-7-1923.

B. இராஜராஜேஸ்வரஸேதுபதி,
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.